இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER
இதழ் 392
சனி, 23 மே, 2026 |
பக்கங்கள் 17
www.ilakku.org



# தடம் புரளும் தமிழரசு

விதுரன்



தீபச்செல்வன்

# இனப்படுகொலைப் போரில் பலியெடுக்கப்பட்ட ஈழக் குழந்தைகள்




தமிழில்: ஆர்த்திகன்

# அறுபது ஆண்டுகால சுழற்சியை உடைத்த ஜென் Z தலைமுறை

# வலி.வடக்கு காணி உரிமையாளர்கள் போராட்டத்திற்கு ஆதரவு தருமாறு கோரிக்கை



யாழ்ப்பாணம்- வலிகாமம் வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி, காணி உரிமையாளர்களால் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வரும் போராட்டம், நேற்றும் (22) இராணுவத்தினரின் “கொமாண்டோ” பங்களா (Commando Bungalow) முன்பாக ஐந்தாவது நாளாக நடத்தப்பட்டது.

வலி. வடக்கில் 249, 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது. யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்துள்ள போதிலும் , அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது

இந்நிலையில் தமது 651 ஏக்கர் வரையிலான காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகளை விடுவிக்குமாறு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்தனர். இதன்படி, நேற்றைய தினமும் போராட்டத்தை முன் னெடுத்தனர்.

தொடர்ச்சி: பக்கம் 13

## நிலைமை மோசமடைவதற்குள் நடவடிக்கை எடுக்கவும்:சஜித்



இலங்கை மீண்டும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பின்னணியில், அதற்கு அவசரகால தேசியத் தீர்வுகளை வகுப்பதற்காகத் துரிதமாக சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்டுமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் முறைப்படி வேண்டு கோள் விடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இது குறித்து கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இலங்கை மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. தற்போது வேகமாகச் சரிந்துவரும் ரூபாவின் பெறுமதி, அதிகரித்து வரும் செலவீன அழுத்தங்கள் மற்றும் பெருகிவரும் பொருளாதார நிச்சயமற்ற தன்மை என்பன இனியும் ஒரு தரப்பினரை மாத்திரம் பாதிக்கும் பிரச்சினையாகக் கருத முடியாது. இது ஒட்டுமொத்த நாட்டையும்

தொடர்ச்சி: பக்கம் 14

## மாகாண சபை தேர்தல் குறித்து பாராளுமன்றத் தெரிவுக்குழு விசேட கவனம்




பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படும் முறைப்படி மாகாண சபைத் தேர்தல்களை நடத்தத் தயாராக இருப்பதாக தேர்தல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது குறித்து பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்னிலையில் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் முன்னிலையாகியிருந்த போதே இந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளின் பங்களிப்புடன் இக்கூட்டம் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, சட்டமா

தொடர்ச்சி: பக்கம் 14

# எபோலா நோய்ப் பரவல் வேகமாக மோசமடையக்கூடும் - உலக சுகாதார அமைப்பு



கிழக்கு காங்கோ ஜனநாயகக் குடியரசில் (டி.ஆர். காங்கோ) ஏற்பட்ட சமீபத்திய நோய்ப் பரவலின் போது, கிட்டத்தட்ட 600 பேருக்கு எபோலா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும், குறைந்தது 139 பேர் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் உலக சுகாதார அமைப்பு (WHO) புதன்கிழமை(20) அறிவித்தது.

காங்கோ சுகாதார அமைச்சர் சாமுவேல் ரோஜர் கம்பா, நாட்டில் இதுவரை 543 பேருக்கு எபோலா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

வைரஸ் பரவுவதற்குக் காரணமான பல காரணிகளைச் சுட்டிக்காட்டி, இந்த நோய்ப் பரவல் வேகமாக மோசமடையக்கூடும் என்று உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் எச்சரித்துள்ளார். உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, சுகாதார அதிகாரிகள் இந்த நோய்ப் பரவலைக் கண்டறிவதற்கு முன்பே, எபோலா பல வாரங்களாகப் பரவிக் கொண்டிருந்திருக்கலாம் என்பதால், நோயாளிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பல நகர்ப்புறங்களில் ஏற்கனவே நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், உயிரிழந்தவர்களில் சுகாதாரப்

தொடர்ச்சி: பக்கம் 14

## ஈரான் குறித்த தொலைபேசி அழைப்பிற்குப் பிறகு நெதன்யாகு கடும் கோபமடைந்தார்



ஈரானுடனான போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான புதிய முன்மொழிவு தொடர்பாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்புடன் நடந்த பதற்றமான தொலைபேசி உரையாடலுக்குப் பிறகு இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடும் கோபமடைந்தார் என்று இந்த விவகாரம் குறித்து அறிந்த மூன்று வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஆக்சியோஸ் புதன்கிழமை(20) செய்தி வெளியிட்டது.


இந்த உரையாடல் குறித்து அறிந்த ஒரு அமெரிக்க வட்டாரம், ஈரான் மீதான “மிகப் பெரிய தாக்குதலை”ட்ரம்ப் தாமதப்படுத்திய பின்னர் இந்த உரையாடல் நடந்ததாகவும், மேலும் இராஜதந்திரத்திற்கு அதிக அவகாசம் அளிக்குமாறு வளைகுடாத் தலைவர்கள் அமெரிக்காவைக் கேட்டுக்கொண்டதாகவும் கூறியது.

அதன்பிறகு, அமெரிக்காவும் ஈரானும் ஒரு ஒப்பந்தத்திற்கும் மீண்டும் போர் தொடங்குவதற்கும் இடையிலான “சரியான எல்லைக்கோட்டில்” இருப்பதாக அமெரிக்க அதிபர் கூறியுள்ளார்.

“ஒன்று ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளுங்கள் அல்லது நாங்கள் சில மோசமான காரியங்களைச் செய்வோம்,” என்று புதன்கிழமை செய்தியாளர்களிடம் ட்ரம்ப் கூறினார்.

தொடர்ச்சி: பக்கம் 15

## கியூபா மீது தாக்குதலுக்கு தயாராகும் அமெரிக்கா



கியூபாவின் முன்னாள் அதிபர் ரவுல் காஸ்ட்ரோ மீது அமெரிக்க நீதித்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. வெனிசுலாவில் ஆட்சி மாற்றம் குறி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, கியூபா அடுத்ததாகக் குறிவைக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்த சில மாதங்களுக்குப் பிறகு இந்தக் குற்றச்சாட்டு வந்துள்ளது.

புதன்கிழமை(20) தாக்கல் செய்யப்பட்ட, பரவலாக எதிர்பார்க்கப்பட்ட இந்தக் குற்றச்சாட்டு, 1996-ஆம் ஆண்டில் தீவின் கடற்கரைக்கு அப்பால், கம்யூனிச எதிர்ப்பு கியூப அகதிகளால் இயக்கப்பட்ட இரண்டு அமெரிக்க விமானங்களைச் சுட்டு வீழ்த்த காஸ்ட்ரோ உத்தரவிட்டதாகக் குற்றம் சாட்டுகிறது. அந்த விமானங்கள் அமெரிக்க விமானப்படையுடன் தொடர்புடையவை என்றும், அவை

தொடர்ச்சி: பக்கம் 14

## ஈரான் போர் இலங்கையில் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது



ஈரான் போரினால் எரிசக்தி விலைகள் அதிகரித்து, தேயிலை ஏற்றுமதிக்கான தேவை குறைவதால், இலங்கை தேயிலைத் தொழிலாளர்கள் பெருகிவரும் இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

“எங்களால் சமாளிக்க முடியுமா என்று தெரியவில்லை. இந்தப் போர் தொடர்ந்தால், பலர் இன்னல்களைச் சந்திப்பார்கள்,” என்று இலங்கையின் ஹட்டனில் உள்ள டன்கெல்ட் தேயிலைத் தோட்டத்தின் தொழிலாளியான ஜசிந்தா மலர், ராய்ட்டர்ஸ் செய்தி நிறு வனத்திடம் கூறினார்.

போரினால் சமையல் எரிவாயு விலை உயர்ந்ததால், மலர் தனது குடும்பத்தினருக்கான உணவை சமைக்க விறகைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளார். ஏற்றுமதி குறைந்து வருவதால் தேயிலைத் தொழிலாளர்களும் நிச்சயமற்ற தன்மையை

தொடர்ச்சி: பக்கம் 14

# 1958 ம் ஆண்டு இனப்படுகொலை இன்று 68 வது ஆண்டு நினைவு: -பா.அரியநேத்திரன்



இனப்படுகொலையானது 1958 மே 22 இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட நாடு தழுவிய இனப்படுகொலை இதுவாகும். இந்த வன்முறையானது 1958 மே 22 ல் தொடங்கி 1958 ஜூன் 08 ம் திகதி வரை நீடித்தது சிங்கள குண்டர்களை அப்போது ஆட்சியில் இருந்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பிரதமரான எஷ்.டவிலியூ ஆர்.டி. பண்டாரநாயக்கா அரசினால் ஏவிவிடப்பட்டு நூற்றுக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்,

பெண்களின் மீதான பாலியல் வன்முறைகள் நிகழ்த்தப்பட்டன, தமிழர்களின் சொத்துக்கள் மற்றும் வணிக நிலையங்கள் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன.

இலங்கையில் கொண்டுவரப்பட்ட ‘சிங்களம் மட்டும்’ சட்டத்திற்கு எதிராக தமிழர்கள் நடத்திய போராட்டங்களை அடுத்து, இனவாதக் குழுக்களால் இந்த வன்முறை திட்டமிட்டுத் தூண்டப்பட்டது.

வவுனியாவில் நடைபெற்ற 6,வது இலங்கை தமிழரசுக் கட்சி மகாநாட்டுக்கு 1958 மே22 ம் திகதி மட்டக்களப்பு மற்றும் அம்பாறையிலிருந்து மட்டக்களப்பு ரயிலில் சென்ற தமிழர்கள், பொலன்னறுவை பகுதியில் சிங்களக் காடையர்களால் கொடூரமான முறையில் தாக்கப்பட்டு சிலர் கொல்லப்பட்டனர்.

1958 மே 22 – இனக்கலவரம் ஆரம்பம் சிங்களவரால் தமிழர்கள் கொலைசெய்யப்பட்டனர். 1958 மே 23 – மட்டக்களப்பில் தொடருந்து ஒன்று தடம் புரண்டது. 1958 மே 24 – இலங்கையில் பொலன்னறுவைதொடருந்து நிலையத்தில் தொடருந்தில் வந்த தமிழ்ப் பயணிகள் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். பல இடங்களிலும் இனக்கலவரம் பரவியது.

1958 மே 25 – பொலன்னறுவைவையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 1958 மே 27 – இலங்கை முழுவதற்கும் அவசரகாலச் சட்டம் அறிவிக்கப்பட்டு, ஊடகத் தணிக்கை அமுல்படுத்தப்பட்டது. நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிரப்பிக்கப்பட்டது.

1958 மே 27 – இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜாதிக விமுக்தி பெரமுன ஆகிய கட்சிகள் தடை செய்யப்பட்டன. 1958 மே 27 – இலங்கையின் தெற்கே பாணந்துறையில்சிங்களக் காடையர்களால் இந்துக் கோவில் ஒன்று எரிக்கப்பட்டு, கோவில் பூசகர் சுந்தரராஜக் குருக்கள் சித்திரவதை செய்யப்பட்டு உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டார். இவரது 25 வயது இளம் மனைவியும் அவரது 4 வயதுக் குழந்தையும் பின்னர் அகதிகளாக யாழ்ப்பாணம் சென்றனர்

1958 மே 28 – கல்கிசையில் தமிழருக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்ட ஆயிரத்திற்கும் அதிகமானோர் இராணுவத்தினரால் கலைக்கப்பட்டனர். 1958 மே 28 – கல்கிசை, ஓட்டல் வீதியில் தமிழர் ஒருவர் உயிருடன் எரிக்கப்பட்டார்.

1958 மே 29 – யாழ்ப்பாணத்தில் எந்த ஒரு சிங்களவரும் கொல்லப்படவில்லை என அங்கு பயணம் மேற்கொண்ட பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் குணசேன டி சொய்சா பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவிற்கு அறிவித்தார். யாழ்ப்பாணம் நாக விகாரை தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

1958 மே 30 – இலங்கையின் தெற்கே கலவரங்களால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் அகதிகளாக கொழும்பு றோயல் கல்லூரி, புனித பீட்டர் கல்லூரி ஆகியவற்றில் தங்க வைக்கப்பட்டனர். 1958 ஜூன் 01 – கலவரங்களில் பாதிக்கப்பட்ட 4,397 தமிழ் அகதிகள் கப்பல் மூலம் காங்கேசன்துறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கிருந்து 2,100 சிங்களவர்கள் கொழும்பு கொண்டு வரப்பட்டனர்.

1958 ஜூன் 05 – இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 10 உறுப்பினர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். 1958 சயூன் 6 – மேலும் 5,029 தமிழர் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டனர். 1958 ஜூன் 8 – ஜாதிக விமுக்தி பெரமுன கட்சித் தலைவர் கே. எம். பி. ராஜரத்தினா வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

இந்தத் தாக்குதல்களைத் தொடர்ந்து, கொழும்பு, பதுளை மற்றும் மலையகப் பகுதிகளிலும் தமிழர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பாணந்துறை போன்ற இடங்களில் தமிழ் மக்களின் வழிபாட்டுத் தலங்கள் எரிக்கப்பட்டன.

வன்முறை தீவிரமடைந்து பல நாட்கள் ஆகும் வரை அரசாங்கம் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. 1958 மே 27 ல் நாட்டில் அவசர காலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது.

இலங்கையின் 1958 இனப்படுகொலைக்கு முன்னம் முதலாவது தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலையானது கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம் கல்லோயாவில் 1956 ஜூன் 11 ல் நடந்தது. இந்த இனப்படுகொலைதான் இலங்கை பிரித்தானியரிடம் இருந்து 1948 பெப்ரவரி 04 ல் விடுதலை பெற்றபின்னர் இலங்கையில்

**தொடர்ச்சி: பக்கம் 13**

## ஆசிரியர் தலையங்கம் | 23 மே, 2026

# பிரித்தானிய காலனித்துவத்திடமிருந்து ஈழத்தமிழரிடம் இறைமை மீளவும் மீண்ட 54வது ஆண்டு 22.05. 2026

உலக அரசியல் வரலாற்றில், இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரை தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வரும் உலகின் மூத்த குடிகளில் ஒன்றான ஈழத்தமிழர்களின் இறைமை 176 ஆண்டுகளாக பிரித்தானியாக் காலனித்துவ ஆட்சியாளர்களிடமிருந்து இயல்பாக ஈழத்தமிழர்களிடமே மீளவும் மீண்ட 54வது ஆண்டு 22.05.2026 இல் பதிவாகியது.

அது குறித்த வரலாற்று சான்றுகளை இலக்கு இவ்வாரத்தில் மீள் நினைவுறுத்த விரும்புகிறது.

1. ஈழத்தமிழர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இலங்கைத் தீவில் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் இன்று வரை வாழ்ந்து வரும் உலகின் மூத்த குடிகள் என்பதை இலக்கு முதலில் தெளிவாக்க விரும்புகிறது.

2. ஈழத்தமிழர்கள் நவீன அரசாக உலக வரலாற்றில் 13ம் நூற்றாண்டு முதல் 16ம் நூற்றாண்டு வரை விளங்கிய யாழ்ப்பாண அரசை போர்த்துக்கேய காலனித்துவ ஆட்சியாளர் 1619 இல் ஈழத்தமிழரின் யாழ்ப்பாண அரசின் இறைமை கைப்பற்றப்பட்டது என்பது வரலாறு. 22.06. 1658 இல் போர்த்துக்கேயக் காலனித்துவத்திடமிருந்த யாழ்ப்பாண அரசின் இறைமை டச்சுக்காரரால் கைப்பற்றப்பட்டது. 22.09.1795 இல் இலண்டன் கிழக்கிந்தியக் கம்பெனி மதராசிலிருந்து (இன்றைய சென்னை) தமிழகத்தையும் ஈழத்தையும் ஒரே அரசியல் அலகாக ஒரே சட்டமும் நிதியும் கொண்டு ஆளத் தொடங்கிய போதுயாழ்ப்பாண அரசின் இறைமை டச்சுக்காரரிடமிருந்து பிரித்தானியரைச் சென்றடைந்தது

3. ஆயினும் கண்டியரசினை 1815 இலும் ஈழத்தமிழரின் வன்னியரசினை 31.10.1832 இலும் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் கைப்பற்றும் வரை கண்டி அரசின் இறைமையும் வன்னியரசின் இறைமையும் தனித்துவமானதாகவே இருந்தன.

4. இதன் பின்னரே 1833 மார்ச்சில் கோல்புறூக் கமரோன் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் இலங்கைத் தீவு முழுவதினதும் ஒற்றையாட்சி ஆட்சியாளராகப் பிரித்தானியப் பேரரசு தன்னைக் கட்டமைத்தது. பிரித்தானிய காலனித்துவ அரசின் நீதி முறைமைக்கும் பொருளாதார முறைமைக்கும் இராணுவ நலன்களுக்குமாக இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வந்த ஈழத்தமிழர் எனப்படும் இலங்கைத் தமிழ்த்தேச இனத்தையும் சிங்களத் தேச இனத்தையும் அவற்றின் தனித்தனியான அரசுக்களின் நாட்டெல்லைகளையும் ஒன்றாக மக்கள் விருப்புப் பெறப்படாது பிரித்தானியக் காலனித்துவ அரசு இணைத்தது. இதன்வழி சிலோன் என்னும் அதுவரை இலங்கைத் தீவின் வரலாற்றில் இல்லாத ஒற்றையாட்சிப் பிரித்தானியக் காலனித்துவ அரசை பிரித்தானியா நிறுவியது. சிலோனின் தேசமக்களாகச் சிலனிஸ் என்னும் அதுவரை இலங்கைத் தீவின் வரலாற்றில் இல்லாத தேசமக்கள் இனமொன்றையும் பிரித்தானியா செயற்கையாகக் கட்டமைத்தமை வரலாறு.

5. இந்த பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியில் இழந்த தங்களின் இறைமையை மீளப்பெறவே தமிழர்களும் சிங்களவர்களும் தனித்தனியாகவும் இணைந்தும் பலவழிகளில் 1833 முதல் போராடினார்கள் என்பது வரலாறு.

6. 1920களில் சிங்கள இடதுசாரித்தலைவராகத் இலங்கைத் தீவில் முற்போக்குக் கட்சி அமைத்து தன்னை வெளிப்படுத்தத் தொடங்கிய எஸ் டபிள்யூ ஆர் டி பண்டாரநாயக்கா பத்திரிகைகளுக்கு 19.05. 1926இல் எழுதிய ஆறு ஆக்கங்களில் இலங்கைத் தீவுக்கு கூட்டாட்சி முறைமையே காலனித்துவத்திடம் இழந்த யாழ்ப்பாண அரசினதும் கண்டி அரசினதும் கோட்டே அரசினதும் ஆட்சியை அந்த அந்த அரசுக்களின் மக்கள் முழுஅளவில் மீளப்பெற ஏற்புடையது என்று எழுதி இலங்கைத் தீவில் கூட்டாட்சியை பிரித்தானிய காலனித்துவ அரசிடம் கேட்ட முதல் இலங்கை அரசியல்வாதியாக விளங்கினார். யாழ்ப்பாண நாட்டுச் சபை கண்டி நாட்டுச் சபை காலி நாட்டுச்சபை மூன்றினதும் தனித்துவமான தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் மக்கள் தமது அரசியல் உரிமைகளை மீளப்பெறுவர் என சிலோனுக்குப் பொறுப்பாட்சியை வழங்க பிரித்தானிய காலனித்துவ அரசால் நியமிக்கப்பட்ட டொனமூர் ஆணைக்குழுவிடம் அவரே முதன் முதலில் கோரினார்.

7. ஆனால் பிரித்தானியக் காலனித்துவ அரசாங்கம் 04.02.1948இல் தாங்கள் செயற்கையாக உருவாக்கிய சிலோன் அரசுக்குச் சுதந்திரத்தை வழங்குகையில் ஈழத்தமிழர்களின் இறைமையைச் சிங்களப்பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமைக்குள் சிங்களவர்களுடன் இணைத்த சோல்பரி அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் சுதந்திரம் வழங்கியது. இதன் மூலம் தமிழர்கள் மேல் சிங்கள நவகாலனித்துவ ஆட்சிமுறைமையையும், சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்றக்கொடுங்கோன்மை ஆட்சியினையும் பிரித்தானியா ஏற்படுத்தியதால் ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினை காலனித்துவத்தால் ஏற்படுத்தப்பட்டு காலனித்துவத்தால் தீர்க்கப்படாத ஐக்கிய நாடுகள் சபையால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையாக இன்றும் உள்ளது என்பதை இலக்கு மீள்கவனப்படுத்தி இப்பிரச்சனை தீர்வு பெறும் வரை ஈழத்தமிழர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு பிரதிநிதி ஒருவரை ஈழத்தமிழர்களின் இருப்பையும் வாழ்வையும் பாதுகாக்க நியமிக்க உலகெங்கும் புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழர்கள் கேட்க வேண்டு மென்பது இலக்கின் கருத்தாகவுள்ளது.

8. சிலோனின் சுதந்திரத்திற்குப் பின்பும் சோல்பரி அரசியல் அமைப்பின் 29(2) பிரிவு ஈழத்தமிழர்களதும் சிங்களவர்களதும் தனித்தனியான இறைமைகளின் மீயுயர் இறைமையாளராகப் பிரித்தானிய முடிக்குரிய அரசியே விளங்கினதாலும் அரசின் தலைவியாக அவரே தொடர்ந்ததாலும் தமிழ் அரசியல்வாதிகள் சனநாயக வழிகளில் போராடி தங்கள் அரசியல் உரிமையை அடையலாமென 24 ஆண்டுகள் முயற்சித்தனர். இவ்வாறு பிரித்தானிய அரசிடம் இறைமை பகிரப்பட்ட நிலையிலேயே சிலோனுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது என்பதற்கு இரஸ்யா 1948 முதல் 1956 வரை சிலோனுக்குத் தனியான உறுப்புரிமை ஐக்கிய நாடுகள் சபையில் கிடைப்பதை தனது ரத்து அதிகாரத்தை பயன்படுத்தி சிலோனின் மீயுயர் இறைமை தொடர்ந்தும் பிரித்தானிய மகாராணியிடமே இருப்பதால் அதனை தனியான நாடாக அனுமதிக்க இயலாதெனக் காரணங்காட்டித் தடுத்தமை அனைத்துலக சட்டச்சான்றாக உள்ளது. இது ஈழத்தமிழரின் சிங்களவர்களின் இறைமை தொடர்ந்தும் பிரித்தானிய அரசிடமே இருப்பதை உலகிற்குத் தெளிவாக்கியது.

அத்துடன் கோடீஸ்வரன் வழக்கில் பிரித்தானிய பிரிவிக்கவுன்சில் சிலோன் அரசாங்கத்தின் சிங்களம் மட்டும் சட்டம் சோல்பரி அரசியலமைப்புக்கு எதிரானது என்பதால் அதனை மீளப்பெறுவதுடன் கோடீஸ்வரனை வேலையை விட்டு விலத்திய நாள் முதலான சம்பளத்தைக் கொடுத்து மீளவும் பதவியில் அமர்த்த வேண்டுமெனவும் வழங்கிய தீர்ப்பு; உள்நாட்டுச் சட்டரீதியாகவும் பிரித்தானியாவிடம் இறைமை தொடர்ந்ததை சிலோன் அரசுக்கே உணர்த்திய வரலாறாக உள்ளது. இந்த பிரித்தானிய பிரிவிக்கவுன்சிலின் தீர்ப்புக்கு கட்டுப்பட மறுத்து 22.05. 1972இல் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிறிலங்காவின் இடதுசாரிக்கட்சியினருடனான கூட்டாட்சி அரசாங்கம் சோல்பரி அரசியல் அமைப்பினை வன்முறைப்படுத்தி சிலோன் பாராளுமன்றக் கட்டிடத்திற்கு வெளியே நவரங்கலா மண்டபத்தில் சிங்கள பௌத்த சோசலிசக் குடியரசினைத் தன்னிச்சையாகப் பிரகடனப்படுத்தியது.

இந்த அரசியலமைப்புக்கான அரசியல் நிர்ணய சபையில் தமிழ்ப்பாராளமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்கும் மேலானவர்கள் பங்குபற்றாததினால் சிறிலங்கா சிங்கள பௌத்த சோசலிசக் குடியரசு அரசியலமைப்புக்கு ஈழத்தமிழர்களை ஆட்சிப்படுத்தும் சட்டத்தகுதி இழப்பு ஏற்பட்டது. இதனால் ஈழத்தமிழர்களின் இறைமையைச் சிங்களவர்களுடன் இணைத்த சோல்பரி அரசியலமைப்பின் இணைப்பிற்கான பாதுகாப்பு அலகாக இருந்த சோல்பரி அரசியலமைப்பின் 29(2) ஐ இந்தக் குடியரசு அரசியலமைப்பு வன்முறைப்படுத்தியதால் பிரித்தானியரிடம் இருந்த ஈழத்தமிழரின் .இறைமை ஈழத்தமிழரிடமே மீண்டது. ஈழத்தமிழர்கள் அரசற்ற தேசஇனமாக (Nation with out State) மாறினர். இதனால் அன்று முதல் இன்று வரை அரசற்ற தேச இனமான ஈழத்தமிழர்கள் தேசியப் பிரச்சினை என்பது தங்களின் மக்கள் இறைமை தங்களுக்குத் தரும் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் ஈழத்தமிழர்கள் தங்களுடைய அரசியல் எதிர்காலத்தை தாங்களே நிர்ணயித்து தங்களின் பாதுகாப்புடன் கூடிய அமைதி வாழ்வையும் வளர்ச்சிகளையும் தாங்களே உறுதிப்படுத்தல் என்பதாக உள்ளது.

9. 07.02.1975ம் திகதிய காங்கேசன்துறைத் தொகுதியில் நடைபெற்ற ஈழத்தமிழரின் தன்னாட்சிப்பிரகடனத்துக்கான அடையாளக் குடியொப்பம் அதில் பல்லாயிரம் மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்ற தந்தை செல்வநாயகம் அவர்களின் 10.02.1975ம் திகதிய சிறிலங்கா தேசிய சபை தன்னாட்சிப்பிரகடனம். அத்துடன் தான் 24 ஆண்டுகாலமாக கேட்டு வந்த கூட்டாட்சிக் கோரிக்கையிலிருந்து அந்தச் சிறிலங்கா தேசிய சபைத் தன்னாட்சிப் பிரகடனத்திலிருந்து விலகி ஈழத்தமிழர்களின் தன்னாட்சியின் அடிப்படையில் தன்னாட்சியே அவர்களுக்கான பாதுகாப்புடன் கூடிய அமைதியையும் வளரச்சிகளையும் தரும் என்பதை உலகிற்கு உறுதிப்படுத்தியமை மற்றொரு வரலாற்று மாற்றம்.

10. தன்னாட்சிப்பிரகடனம் ஈழத்தமிழரின் அரசியல் கொள்கையாகவும் அதனை அடைதல் என்பது அதன் அரசியல் கோட்பாடாகவும் 14.05.1976ம் திகதிய வட்டுக்கோட்டை தீர்மானத்தால் உலகிற்கு அறிவிக்கப்பட்டு 1977 தமிழர் தாயக குடியொப்பத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு தமிழீழ தேசிய சபைக்கான அரசியலமைப்பினை வெல்பவர் எழுதுவர் எனத் தெரிவிக்கப்பட்டு இதனை சனநாயக வழிகளில் சிறிலங்கா ஏற்க மறுத்தால் எந்த வழிகளிலும் அடைவோம் என்ற அந்தக் குடியொப்ப மக்களாணையே 1978 முதல் 2009 வரையிலான ஈழத்தமிழரின் நடைமுறைரசுக்கான அனைத்துலக சட்டத்தகுதியை வழங்கியது என்பது வரலாறு.

இந்த ஈழத்தமிழர் வரலாற்றுப் பரிணாம வளரச்சிகளை கவனத்திலெடுத்து பண்டாரநாயக்கா கால 100 ஆண்டுப் பழமைச் சரக்கானதும் தந்தை செல்வநாயகம் அவர்களால் கைவிடப்பட்டதுமான கூட்டாட்சி கோரிக்கையில் மக்களை மயக்காது காலத்துக்கேற்ற இடத்துக்கேற்ற வகையில் ஈழத்தமிழரின் காலனித்துவத்தால் கைப்பற்றப்பட்ட யாழ்ப்பாண வன்னியரசுக்களின் நிலம் ஈழத்தமிழர்களால் “ இந்த மண் எங்களின் சொந்த மண்” எனப்படுவது பிரிவினையல்ல அதன் அடிப்படையிலேயே ஈழத்தமிழர்களின் மண் மேலான உரிமை தாயக உரிமை ஏற்கப்பட்டாலே அது ஈழத்தமிழருக்கான சமத்துவ சகோதரத்துவ சுதந்திர வாழ்வை உருவாக்கும் என்னும் உண்மையின் அடிப்படையில் இந்த ஈழத்தமிழர்களின் இறைமை அவர்களிடமே மீண்ட வரலாற்றின் 54 வது ஆண்டிலாவது ஈழத்தமிழர்கள் தேச நிர்மாணத்தை முன்னெடுக்க வேண்டும் என்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது. இவ்வாறு ஒரு தொன்மையான மக்களினம் தனது வாழ்வை உறுதிப்படுத்த எடுக்கும் முயற்கிகளை வெறுமனே பயங்கரவாதமென முடக்க வேண்டாமென உலக மக்களிடமும் நாடுகளிடமும் உலக அமைப்புக்களிடமும் புலம் பதிந்து வாழும் ஈழத்தமிழர்கள் ஒன்று பட்டு கோரினாலே தாயகத்தில் மக்களுக்கான அரசியல் எதிர்காலம் உலகால் உறுதி செய்யப்படுமென்பதையும் இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

**ஆசிரியர்**

 | © 2026 இலக்கு இணையம்



# உங்கள் கனவுகளின்... மின்மினி நான்!!

முள்ளிவாய்க்கால் முற்றம் ...
நிலவு மறைந்த ஒரு கருந்தேசமாகக் கிடந்தது.
வானும் மண்ணும் மூச்சை அடக்கிக் கொண்டன.

எங்கோ அலைந்து இரத்தக் காறைகள் படித்த ...
திருமணப் பத்திரிகை கால்களில் மிதிபட்டு
சோபித்துக் கிடந்தது...

அந்தோ அவன் சென்ற திசையின்திட்டுக்களில்....
கண்களைப் பதித்தபடி
அவள் நினைவுகளை இழந்து கொண்டே
இருந்தாள்...

வீதியோரத்தில் அனுங்கும் ஒரு நாய்க்குட்டி
அழுது வடித்த கண்களோடு ...
எழுந்து நடக்க முடியாது இழுத்துக் கொண்டே
இருந்தது...

நான் ஆசையாய் சுமந்த பால் வாசனை மாறாத
மழலையின் உடலை...
புழுக்கள் உணவாக்கிக் கொண்டே இருந்தன...

கரும்புகைக்குள் மறைந்து போன சூரியனின்
ஒளியை... இன்று காண
மாட்டேனா!
நாளை காண மாட்டேனா!
என்று அவள் பூஞ்சை விழிகள் காத்துக் கிடந்தன...

சூனியமாய் இருந்த என்
பார்வையில்...
தூரத் தெரியும் ஒற்றைப் பனை மட்டும்... என்னை
அழைப்பது போல எனக்குத் தெரிந்தது...

ஈர நிலமே!
உன் குருதி படர்ந்த இந்த மண்ணில்...
நான் இன்னும் உரமான நம்பிக்கையோடு
இருக்கின்றேன்...

காத்திரு என் தேசமே!
மீண்டும் நான் வருவேன்.
உன் தீட்டுக்களை துடைக்க...
நான் மீண்டும் வருவேன்.
மறந்தும் என்னை நீ மறந்து விடாதே!

இது என் நிலம்!
இது என்ர ஆச்சி அப்பு தொடங்கி எங்கள்
அண்ணன்மார்
வரை வாழ்ந்த நிலம். என் அடையாளம் என்
நிலம்.
நான் தொலைக்க முடியாத சொத்து என் நிலம்.

அன்று நீங்கள்
எமக்காக இங்கே தானே விதையானீர்கள்.
அந்தப் பெரும் விருட்சத்தின் மகரந்தம் நான்.
மறுபடியும் என் நிலத்தில் உங்களைக் காண்பேன்.

இதோ இப்போதே எழுதி வைத்து விடுகின்றேன்.
உங்கள் கல்லறைகளை
நான் முகர்ந்து பார்க்கும் போது..
உங்கள் விதைகுழிகள் பூத்துக்குலுங்கும்.

மெய்ப்பட்ட கனவுகளை
சுமந்த படியே நீங்கள்
என்னை ஆசீர்வதிப்பீர்கள்.
அது உங்கள் மகிழ்ச்சிக்கான நொடிகளாக
பரிணமித்திருக்கும்.

தாயகம் கலாபாரதீ

# புகைப்படத் தொகுப்பு: மே 18 முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நாள் 2026





## தமிழகம் மற்றும் புலம்பெயர்ந்த தேசங்களின் நிகழ்வுகள்...





# தடம் புரளும் தமிழரசு

விதுரன்

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில், முக்கால் நூற்றாண்டு காலப் பாரம்பரியமும், அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட நிறுவனமயப்பட்ட ஆளுமையும் கொண்ட பேரியக்கமாக விளங்குவது இலங்கைத் தமிழரசுக் கட்சியாகும்.

தந்தை செல்வாவின் வழிவந்த, தத்துவங்களாலும் அர்ப்பணிப்புகளாலும் கட்டியெழுப்பப்பட்ட இந்தக் கட்சி, தற்போது தனது வரலாற்றின் மிக மோசமானதொரு உட்கட்சிப் பூசலையும் தடம் புரளலையும் சந்தித்துக் கொண்டிருக்கின்றது.



கடந்த வாரம் தமிழர் தேசம் முழுவதும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் மூழ்கியிருக்க தமிழரசுக் கட்சி அதன் வவுனியா அலுவலகமான தயாகத்தில் நடத்திய மத்திய குழுக் கூட்டமும், அதனைத் தொடர்ந்து அரங்கேறி வரும் சம்பவங்களும் கட்சியின் எதிர்காலம் குறித்த பலத்த கேள்விகளையும் விமர்சனங்களையும் தோற்றுவித்துள்ளன.

குறிப்பாக, பதில் பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள எம்.ஏ.சுமந்திரனின் மாறுபட்ட செயற்பாடுகள் மற்றும் நிலைப்பாடுகள், கட்சியின் பாரம்பரிய அரசியல் பாதையைச் சிதைத்து, அதனை நலிவடைந்த நிலைக்குக் கொண்டு செல்கின்றமையை பகிரங்கமாகவே உணர முடிகின்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் தமிழ் மக்களின் வரலாற்றில் மிகக் கொடூர ரணங்களை வடுக்களாக சுமந்து வரும் நிலைக்கு காரணமாகிய, உணர்வு பூர்வமான காலப்பகுதியாகும்.




இம்முறை தமிழரசுக் கட்சி பல இடங்களில் கஞ்சி வழங்கும் செயற்பாடுகளையும் நினைவேந்தல்களையும் முன்னெடுத்திருந்த போதிலும், முள்ளிவாய்க்கால் நாளுக்கு முதல் நாளான மே 17ஆம் திகதி தனது உள்ளக முரண்பாடுகளை ஆராய்வதற்காக மத்திய குழுக் கூட்டத்தைக் கூட்டியது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாதவொரு செயலாகும்.

இந்தக் கூட்டம் ஒட்டுமொத்த தமிழ் தேசியப் பரப்பிலும் விசித்திரமான, அதேவேளை கவலையளிக்கும் நகர்வாகவே பார்க்கப்பட்டது. இக்கூட்டம் எவ்வித அவசரத் தேவையுமின்றி, 7 மாதங்களுக்குப் பின்னர் திட்டமிட்ட அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனை இலக்கு வைத்து, அவரை ஓரம் கட்டுவதற்காக அல்லது கட்சியை விட்டு வெளியேற்றுவதற்காகவே கூட்டப்பட்டது என்பது வெளிப்படையானது.

தமிழ் மக்களின் ஆகப்பெரும் சோகத்தை நினைவு கூரும் வாரத்தில், தங்களது சுயநல அரசியல் அதிகாரப் போட்டியை அரங்கேற்றியமை, தமிழரசுக் கட்சி மக்களின் உணர்வுகளிலிருந்து எவ்வளவு தூரம் விலகி நிற்கின்றது என்பதற்கான அப்பட்டமான சான்றாகும்.

கட்சியின் பதில் பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்றது முதல், எம்.ஏ.சுமந்திரனின் செயற்பாடுகள் தந்தை செல்வாவின் பாரம்பரியக் கோட்பாடுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகவே அமைந்துள்ளன.




கட்சியின் ஒழுக்கத்தைப் பேணுகிறேன் என்ற போர்வையில், தனக்குச் சவாலாக இருக்கும் அல்லது மாற்றுக்கருத்துக் கொண்டவர்களைத் தந்திரோபாயமாக வெளியேற்றுவது அல்லது மௌனிக்கச் செய்வது அவரது அரசியல் பணியாக மாறியுள்ளது.

கடந்த காலங்களில், தமிழரசுக் கட்சியிலிருந்தோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்தோ பல முக்கிய ஆளுமைகள் வெளியேறுவதற்கோ அல்லது வெளியேற்றப்படுவதற்கோ சுமந்திரனின் நகர்வுகளே பிரதான காரணமாக இருந்தன என்பது இரகசியமான தொன்றல்ல.

சட்டத்தரணியான அவர், தன் வாதத் திறமையால் கட்சியின் மத்திய குழுவிலும் அரசியல் குழுவிலும் உள்ள ஏனைய உறுப்பினர்களின் குற்றச்சாட்டுகளை மௌனிக்கச் செய்து, கட்சியைத் தன் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தீவிரமாக முயன்று வருகின்றார் என்பது வெளிப்படையானது.

தமிழரசுக்கட்சியின் ஆளுகையில் உள்ள மட்டக்களப்பு மாநகரசபையின் அழைப்பின் பேரில் மட்டக்களப்பு பொதுநூலக கட்டடத்தை திறந்து வைப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கலந்துகொண்ட நிகழ்வில் சுமந்திரன் நடந்துகொண்ட விதம், அவரது மாறுபட்ட அரசியல் நிலைப்பாட்டை மேலும் வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது.



ஜனாதிபதிக்கு முன்னால் உரையாற்றி அவர், 'நாட்டில் இனிமேல் யுத்தம் ஏற்பட அனுமதிக்க மாட்டேன் என்ற ஜனாதிபதியின் கூற்றை வரவேற்று, அதற்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு அவசியம்' என்று அவர் ஞாபகமூட்டிய போதிலும், மேடையில் அவர் காட்டிய அதீத இணக்க அரசியல் விமர்சனத்திற்குரியதாகும்.

நாட்டில் இன்னும் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் எட்டப்படாத நிலையில், ஜனாதிபதியுடன் நினைவுக்கல்லின் திரை நீக்கத்தைப் பகிர்ந்துகொண்டதை 'அதிகாரப் பகிர்வுக்கான முன்னுதாரணம்' என்று அவர் வர்ணிப்பது, யதார்த்தத்திற்குப் புறம்பான, வெறும் மேடைப் பேச்சாகவே சுருங்கிவிடுகிறது.

மறுபுறத்தில், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளும், அதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவும் கட்சிக்குள் இருக்கும் சர்வாதிகாரப் போக்கைக் காட்டுகின்றது.



அரசியலமைப்புப் பேரவையில் அரசாங்கத்திற்குச் சார்பாகச் செயற்பட்டார் என்பதும், அரசியல் குழுவின் தீர்மானத்தை மீறினார் என்பதும் அவர் மீதான குற்றச்சாட்டுகளாக முன்வைக்கப்பட்டாலும், இவற்றுக்குப் பின்னாலுள்ள பிரதான பின்னணி 'தலைமைத்துவப் போட்டி' என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

சிறிதரன் மீதான குற்றச்சாட்டுகளின் உள்ளடக்கத்தை பதில் பொதுச்செயலாளர் சுமந்திரனே தீர்மானிப்பார் என்ற சூழல் நிலவுவது, இந்த விசாரணையின் நடுநிலைமையைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. இங்கு சிறிதரனை நியாயப்படுத்துவது என்பதற்கு அப்பால், அவர் தமிழ் மக்கள் மத்தியிலும், குறிப்பாக வடக்கிலும் கட்சியின் அடிமட்டத் தொண்டர்கள் மத்தியிலும் மிக அசைக்க முடியாத 'மக்கள் செல்வாக்குள்ள தலைவர்' என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

தேர்தல்களில் தொடர்ச்சியாக அவர் பெற்றுவரும் பெரும்பான்மை வாக்குகளும், தமிழ் தேசியக் கோட்பாட்டில் அவர் கொண்டுள்ள தீவிர நிலைப்பாடும் அவரை மக்களின் பிரதிநிதியாக நிலைநிறுத்தியுள்ளது என்பது தான் பொதுப்படையான தமிழர்களின் உணர்வாகவுள்ளது.

அடிமட்ட மக்களின் ஆதரவில்லாத, வெறும் மேட்டுக்குடி வாதத் திறமைகளை மட்டுமே நம்பியிருக்கும் தலைமைகளுக்கு மத்தியில், சிறிதரன் போன்ற மக்கள் செல்வாக்குள்ள தலைவரைப் பழிவாங்கும் நோக்குடன் ஓரம் கட்ட நினைப்பது, தமிழரசுக் கட்சி தனக்குத்தானே வைத்துக் கொள்ளும் சூனியமாகும்.

மக்கள் பலம் வாய்ந்த மற்றும் தகுதி வாய்ந்த தலைவர்களை உள்வாங்கி அரவணைத்துச் செல்வதற்குப் பதிலாக, அவர்களை வெளியே தள்ளுவது தமிழரசுக் கட்சிக்கு அண்மைய காலத்தில் தீராத நோயாகவே மாறிவிட்டது.

தமிழரசுக் கட்சிக்குள் சிறிதரன் சுமந்திரன் ஆகிய இரண்டு அணிகளுக்கு அப்பால், இன்னுமிரண்டு அணிகள்

தொடர்ச்சி: பக்கம் 13

# இனப்படுகொலைப் போரில் பலியெடுக்கப்பட்ட ஈழக் குழந்தைகள்



தீபச்செல்வன்

அண்மையில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின்போது தகிக்கும் வெண்மணலில் ஒரு சிறுமி சோகமான முகத்துடன் நினைவேந்தல் தீபத்தின் அருகே இருந்தாள்.

அவளை ஊடகங்கள் பலவும் படம் பிடித்தன. ஒரு பெரிய மனுசியைப் போல முகம் நிறைய அப்படிச் சோகம் அப்பியிருந்தது. சிறு வயதிலேயே தம் வயதைவிடவும் மீறிய சோகங்களை சுமப்பதுதான் ஈழக் குழந்தைகளின் வாழ்வும் வரலாறும் என்று எண்ணிக்கொண்டேன்.

அதற்கு அவளொரு சாட்சி. இக் கதையைக் கேட்கும்போது பலருக்கும் அந்த நினைவு மீளெழலாம். நம் மண்ணில் குழந்தைகள் எதிர்கொண்ட போர்க்களமும் காணாமல் ஆக்குதல்களும் இனவழிப்புகளும் மிக நெடிய கதைகளைக் கொண்டவை.



இந்த உலகம் எப்போதும் குழந்தைகளின் குருதியினால் நனைந்துள்ளது. உலகின் பல்வேறு அதிகார மற்றும் நலன்சார்ந்த நோக்கங்கள், தேவைகளின் பொருட்டு பெண்களுக்கு அடுத்தபடியாக பலியெடுக்கப்படுபவர்கள் குழந்தைகள்தான். இதில் ஈழ இனப்படுகொலைப் போரும் உள்ளடங்குகிறது. நாம் எதற்காக அழிக்கப்படுகிறோம் என்பதை அறியாமல் குழந்தைகள் இனவழிப்புப் போரில் கொல்லப்படுவதும் காணாமல் ஆக்கப்படுவதும் இல்லாமல் செய்யப்படுவதும் மிகவும் கொடிய செயலாகும். வரலாற்றின் இருண்ட பக்கங்களில் குழந்தைகளுக்கு எதிராக, சிறுவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளையும்ம் துயரங்களையும் நாம் பேசியாக வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

### குழந்தையை காணாமல் ஏங்குகிற தாய்

பன்னாட்டுச் சூழலில் ஈழ இனப்படுகொலையின் தாக்கங்கள் பரவத் தொடங்குகையில் இனப்படுகொலையாளிகள் இவ்விதமாகப் பேசி தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முற்படுவது ஆச்சரியத்திற்குரியல்ல. இனவழிப்பு என்ற சொல்லைப் பகிர்ந்தாலே சட்டம் பாயும் என்கிற அரசின் நிலைப்பாடு, ஈழத் தமிழர்கள் எப்படியான இனவழிப் புச் சூழலில் வாழ்கிறார்கள் என்பதை சர்வதேசம் இன்னமும் புரியச் செய்யும். இன்று காணாமற் போன குழந்தைகளுக்கான சர்வதே தினம். காணாமல் போகும் எதிர்காலத் தலைமுறையினரான குழந்தைகளுக்கு அரசு மற்றும் குடும்பங்களின் பாதுகாப்பு அவசியம் என்பதை வலியுறுத்தும் நோக்கில் இந்த நாள் வருடம்தோறும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இலங்கையில் ஒரு அரசினால் பல நூறு சிறுவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்பது வேறு கதை.

ஒரு திருவிழாவில் குழந்தைகள் காணாமல் போவதையும் அதனால் ஏற்படுகிற துயரத் தெறிப்பையும் நமது சூழலில் நன்றாகப் பார்த்திருக்கிறோம். குழந்தையை காணாமல் ஏங்குகிற தாய், ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் படுகிற துயரமும் விடுகிற கண்ணீரும் எதிர்கொள்ளுகிற அலைச்சலும் பார்க்கிற மனித மனங்களை பெரும் அவலத்தில் தள்ளிவிடும். அதேபோலத்தான் காணாமல் போகிற குழந்தை தன் தாய், தந்தையை சேரும் வரையிலான துயரமும். இதுவே இப்படியெனில் ஈழத்தில் போரில் காணாமல் போகிற குழந்தைகளின் கதைகளும் கணங்களும் எப்படியானவையாக இருக்கும்?



### தாய்மார்களின் மன வெம்மை

சர்வதேச காணாமல் போன குழந்தைகள் தினமான இன்றைய நாளில், ஈழத்தில் போரில் காணாமற் போன ஈழக் குழந்தைகளின் நிலை குறித்து எண்ணுவதும் அதற்காக செயல்படுவதும் அது குறித்து உரையாடுவதும் ஆற்றுப் படுத்தலுக்கும் நீதிக்கும் அவசியமானது. போரில் காணாமல் போன குழந்தைக்காக பதினாறு ஆண்டுகள் ஒரு தாய் படுகிற தவிப்பும் அல்லலும் அவலமும் ஒரு போதும் அடங்கிவிடாது. அத்தகைய தாய்மார்களின் மன வெம்மையே இத் தீவில் வீசுகிறது.



குழந்தைகள் போருடன் தொடர்பற்றவர்கள்.

ஆனால் போரின் முதல் இலக்குகளே குழந்தைகள்தான். போர் மண்ணின் எதிர்காலத் தலைமுறைகளை இல்லாமல் செய்ய குழந்தைகளின் உயிருடன் விளையாடுகிறது. போரில் குழந்தைகள் பலியெடுக்கப்படுவதும் காணாமல் போவதும் உலகு முழுவதும் நிகழ்கிறது. போர் குழந்தைகளை அவர்களின் மண்ணில் காணமற் போகச் செய்கிறது. மண்ணை விட்டுத் துரத்துகிறது. போரினால் தன் சொந்த மண்ணைவிட்டு காடுகளிலும் கடலிலும் பல குழந்தைகள் காணாமல் போகும் கதைகள் இன்றும் அரங்கேறிக்கொண்டுதானிருக்கின்றன.

### காணாமல் போன குழந்தைகள் தினத்தின் கதை

அமெரிக்காவில் இட்டன் பாட்ஷ் என்றஆறு வயதுக்-குழந்தை 1979இல் காணாமல் போனான். பள்ளிக்குச் சென்ற சிறுவன் காணாமல் போனதையடுத்து ஒரு புகைப்படக் கலைஞரான அவனது தந்தை அக் குழந்தையின் புகைப்படத்துடன் குழந்தையை தேடத் தொடங்கினார். அக் குழந்தையின் செய்தி ஊடகங்கள் முழுவதும் பரவின. பல ஊடகங்கள் அதனை தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்தன. அதனைத் தொடர்ந்து அக் குழந்தை தேடப்பட்டான். ஆறுகள், குழந்தைகள் என்று 1981வரை நடந்த தேடலில் 29 குழந்தைகளின் உடல்கள் மீட்கப்பட்டன.



இந்தப் பூமியின் அடுத்த தலைமுறையாக பிறக்கும் குழந்தைகள் கொன்றும் உயிரோடும் வீசப்பட்ட அந்தக் கொடுஞ்செயல்கள் பலரையும் அதிரச்சிகொள்ள வைத்தது. இதனால் 1983இல் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ரீகன் மே 25ஐ காணாமல் போன குழந்தைகளுக்கான தேசிய தினமாக அறிவித்தார். போர், புயல், மழை வெள்ளம் போன்ற செயற்கை மற்றும் இயற்கை இடர்களினால் உலகம் எங்கும் பல்வேறு தேசங்களில் குழந்தைகள் காணாமல் போவது என்பது தொடர்கதையாக இடம்பெறுகிறது. அத்துடன் காணாமல் போகும் குழந்தைகளைத் தேடுவதும் அந்தத் தேடல் பல வருடங்கள் நீள்வதும் சில குழந்தைகள் பல வருடங்களின் பின்னர் மீள்வதும் நடக்கிறது.

### பாலச்சந்திரன் எனும் குறியீடு



ஈழத்தில் நடந்த போரில் பல குழந்தைகள் காணாமல் போனார்கள். பல குழந்தைகள் போர்க் களத்தில் கொல்லப்பட்டார்கள். ஈழம் குழந்தைகளின் குருதியில் நனைந்தது. ஈழ இறுதிப் போரில் சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஈழ இறுதிப் போரின் போது பச்சிளங் குழந்தைகளும் சிறுவர்களும் சிங்கள அரச படைகளால் கொன்று வீசப்பட்ட காட்சிகளை இந்த உலகம் அவ்வளவு எளிதில் மறந்துவிடாது. அத்துடன் இறுதிப் போர்க்களத்தில் பெரியவர்களுடன் சிறுவர்களும் கொடூர சித்திவதை செய்யப்பட்டு கொன்றமையும் உலகறிந்த விடயமே. இனப்படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் குறியீடாக இருக்கும், காணாமல் ஆக்கப்பட்ட

தொடர்ச்சி: பக்கம் 14

# மட்டக்களப்பு: கால்நடை பண்ணையாளர்களுக்கு தீர்வு எப்போது...?

மட்டு.நகரான்



மட்டக்களப்பு மாவட்டத்தின் கால்நடை பண்ணையாளர்களின் பிரச்சினைக்கான தீர்வுகள் இல்லாத நிலையில் தொடர்ச்சியாக ஆட்சியாளர்களின் எண்ணப்பாடுகளும் செயற்பாடுகளும் மாறுபட்ட நிலையில் முன்னெடுக்கும்போது அது தொடர்பில் எமது தரப்பில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் என்பது பல்வேறு கேள்விகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

தமது பகுதிகளில் தங்களது கால்நடைகளை வளர்ப்பதற்கு வேறு ஒரு நபரிடம் அல்லது வேறு ஒரு தரப்பினரிடம் அனுமதிபெறவேண்டிய சூழ்நிலை இன்று பண்ணையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தெற்கில் இருப்பவர்கள் வந்து எப்பகுதியிலும் எதுவும் செய்யலாம்,எந்த காணியையும் பிடிக்கலாம்,எந்த மரங்களையும் வெட்டலாம்,காடுகளை அழிக்கலாம் என்ற நிலையிருந்துவருகின்றது.

சிங்கள பௌத்தபேரினவாதத்தின் இந்த நிலைமையினாலேயே வடகிழக்கு தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தாங்கிய போராடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர். ஆயிரக்கணக்கான தியாகங்களும் சொத்தழிவுகளும் எதிர்கொண்ட நிலையிலும் இன்று அதே சூழ்நிலை வடகிழக்கில் உள்ள தமிழர்களுக்கு நிலவிவருகின்றது என்பதே கவலையான விடயம்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடை பண்ணையாளர்களின் பிரச்சினையென்று நீண்டகால பிரச்சினையாக இருந்துவருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் பொருளாதாரத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக கால்நடை வளர்ப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக பால் உற்பத்தி மற்றும் இறைச்சித் தேவைக்காக பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இத்தொழிலை நம்பியே வாழ்கின்றன. எனினும், அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்ட கால்நடை பண்ணையாளர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற அதேநேரம் பாரியளவிலான குடியேற்றத்தினை மட்டக்களப்பு மாவட்டம் எதிர்கொள்ளும் சூழ்நிலையேற்பட்டுவருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மிக முக்கிய வாழ்வாதாரத் தொழில்களில் ஒன்றான கால்நடை வளர்ப்பு, இன்று அதன் வரலாற்றிலேயே மிக மோசமானதொரு சவாலை எதிர்கொண்டுள்ளது. குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு மற்றும் மாதவனை போன்ற பாரம்பரிய மேய்ச்சல் தரைகள் திட்டமிட்ட முறையில் அபகரிக்கப்பட்டு வருவதால், பல்லாயிரக்கணக்கான பண்ணையாளர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடைகள் சுதந்திரமாக மேய்வதற்கென தசாப்த காலங்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்த எல்லைப் பகுதிகள் தொடர்ந்தும் பல்வேறு தரப்பினரால் ஆக்கிரமிக்கப்படும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.




அண்மையில் ஒரு குழுவினர் மயிலத்தமடு, மாதவனை பகுதிக்குள் நுழைந்து காடுகளை அழித்து பயிர்ச்செய்கை முன்னெடுப்பதற்கான முன்னெடுப்புகளை முன்னெடுத்திருந்த அதேநேரம் மட்டக்களப்பு மட்டுமன்றி பல்வேறு இடங்களிலும் குழப்பங்களை ஏற்படுத்தி வரும் அம்பிட்டிய சுமனரத்ன தேரர் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனர் அனுராத ஜகம்பத் ஆகியோரினால் அப்பகுதிக்கு ஒரு தொகுதி சிங்கள மக்கள் அழைத்துச் செல்லப்பட்டு கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

அண்மையில் இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதியின் தலைமையில்நடைபெற்ற கூட்டத்திலும் பேசப்பட்டதுடன் இதற்காக 1570 ஏக்கர் காணிகளை கால்நடைகளுக்கு ஒதுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தார்.இந்த கூட்டத்தில் வனஇலாகா மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் கருத்து கள் என்பதை சாதரணமாக கடந்துசெல்லமுடியாது.மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்களுக்கு காணிகள் வழங்குவது சட்ட விரோதமானது,மாடுகள் வீட்டில் வளர்க்கும் மிருகம் அதனை காட்டில் வளர்ப்பதற்கு வனஇலாகா காணிகளை வழங்காது என ஜனாதிபதியிடம் வனஇலாகா அதிகாரி கருத்துகளை முன்வைத்தார்.

“வனப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சட்டங்களின்படி, இந்த காடுகளை மேய்ச்சல் நிலங்களாக ஒதுக்குவதற்கு எந்தவொரு சாத்தியக்கூறும் இல்லை;. அடுத்த காரணி என்னவென்றால், இது தொடர்பாக அடிப்படை உரிமைகள் மற்றும் ரிட் மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக மகாவலி அதிகாரசபை சம்பந்தமாக 2010ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அவை சுற்றுச்சூழல் அமைப்புகளினால் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

எனவே, இதற்காக அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக கோரிக்கை விடுப்பது என்பது, அரசியலமைப்பு ரீதியாக நாடாளுமன்றத்திற்கும் நீதித்துறைக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் அல்லது மோதல்கள் ஏற்படுவதற்கு ஒரு காரணமாக அமைந்துவிடும் என்பதுதான் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் மற்றும் அங்குள்ள ஏனைய சிக்கல்களும் காணப்படுகின்றன. இதன் காரணமாகவே, வனவள பாதுகாப்பு திணைக்களம் இது தொடர்பான கோரிக்கையை நிராகரித்துள்ளது என அந்த கூட்டத்தில் அதிகாரிகளினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதேபோன்று வனஇலாகா காணியாக அது காணப்படுவதனால் காணியை விடுவிக்கமுடியாது கூறிய நிலையில் அங்கிருந்த மகாவலி அபிவிருத்தி சபை உத்தியோகத்தர் குறித்த பகுதியில் மகாவலி வலதுகரை அபிவிருத்தி திட்டம் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் கால்நடை பண்ணையாளர்களுக்கு நிலங்களை வழங்க முடியும் எனவும் விவசாயிகளின் சம்மததுடன் குளங்களை புனரமைத்துவழங்கவுள்ளதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.”

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் மேய்ச்சல் தரைக்கு காணி வழங்குதல் என்னும் போர்வையில் மாதுறுஓயா திட்டத்தின் கீழ் மகாவலி வலது கரை திட்டம் என்ற அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லைப்பகுதியில் பாரிய குடியேற்றம் செயற் பாடுகள் முன்னெடுப்பதற்கான முஸ்தீபுகள் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் இங்கு ஏற்பட்டிருக்கின்றது.

குறிப்பாக பண்ணையாளர்கள் மட்டுமே பாவனையாக கொண்டிருந்த அப்பகுதியில் விவசாயிகள் உள்ளதாக இங்கு பெரும்பான்மை சிங்கள அதிகாரிகளினால் சுட்டிக்காட்டப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளில் பல இடங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் அழிக்கப்பட்டு சிங்கள ஊர்காவல் படையினரும் தெற்கிலிருந்துவந்த சிங்கள விவசாயிகளும் விவசாயம் முன்னெடுக்கும்போது சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு வராத நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் காடுகளையும் பாதுகாத்துக்கொண்டு தமது கால்நடைகளையும் வளர்க்கும் விவசாயிகளுக்கு காணிகளை வழங்குவது வனஇலாகா சட்டத்திற்கு முரணானது அவ்வாறு வழங்கமுடியாது என சிங்கள அதிகாரியொருவர் மட்டக்களப்பில் தெரிவிக்கின்றார் என்றால் இதுதான் இன்றைய தமிழ் மக்களின் நிலைமை.

ஜனாதிபதி இந்த கூட்டத்தில் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைக்கு 1570 ஏக்கர் காணிகளை ஒதுக்குவதாக தெரிவித்திருக்கின்ற விடயம் பண்ணையாளர்களுக்கு ஏதோ மனநிம்மதியான நிலையிருந்தாலும் இந்த விடயம் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.கூட்டம் நடைபெற்ற அன்றைய தினம் மட்;டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போது மங்கலராமய விகாராதிபதி அம்பிட்டியே சுமனரத்ன தேரர் வந்து ஜனாதிபதியை சந்தித்து புன்னகையுடன் வழியனுப்பியுள்ளார்.



அவர் மட்டக்களப்பில் எந்த ஜனாதிபதி வந்தாலும் தன்னை வந்து சந்திக்கவேண்டும் என்று அடம்பிடித்து போராட்டம் நடாத்துபவர் ஜனாதிபதியை வந்து சந்தித்து சென்றது பாரிய சந்தேகத்தினை ஏற்படுத்தியிருக் கின்றது. மயிலத்தமடு பகுதியில் விகாரை அமைப்பதிலும் சிங்கள குடியேற்றங்களை செய்வதிலும் முனைப்பு காட்டிவரும் அம்பிடியவினை ஜனாதிபதி சந்தித்தமை பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் இந்த செயற்பாட்டினை தமிழ்

தொடர்ச்சி: பக்கம் 14

# கிழக்கு மாகாண தேர்தல்களும் கலக்கம் அடையும் கட்சிகளும், காட்சிகளும்!

**பா.அரியநேத்திரன்**

மாகாணசபை தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என சகல எதிர்கட்சிகளும் இப்போது குரல் கொடுப்பதை காணலாம் அதில் வடக்கிலும், கிழக்கிலும் இரண்டு மாகாணசபை தேர்தலை இலக்குவைத்து ஆளும் தரப்பான தேசிய மக்கள் சக்தி தொடக்கம் வடகிழக்கில் உள்ள தமிழ்தேசிய கட்சிகள், மற்றும் ஏனைய முஷ்லிம், தமிழ் கட்சிகள் அனைத்தும் அதில் கண்வைத்து தமது அரசியல் வேலைகளை செய்வதையும் ஒற்றுமை கதைகளை கதைப்பதையும் காணமுடிகிறது.



இணைந்த வடகிழக்கில் இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987, யூலை,29, ல் கைச்சாத்திட்ட பின்னர் முதலாவது தேர்தல் 1988 நவம்பர் 19,ல் இணைந்த வடகிழக்கு மாகாணசபை தேர்தல் நடைபெற்றது. 1988 டிசம்பர் 10 இல் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் அ. வரதராஜப் பெருமாள் வடகிழக்கு மாகாணசபையின் முதலாவது முதலமைச்சரானார்.

1990 மார்ச்சு 01 அன்று, இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கையை விட்டுப் புறப்படும் தறுவாயில், வடகிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் திருகோணமலை மாகாணசபைக் கூட்டத்தில் தமிழீழத்தைப்பிரகடனப்படுத்தி விட்டு அமைதிப் படையினருடன் சேர்ந்து இந்தியா சென்றார்.

2006,யூலை,14,ல், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி, தற்போதைய ஜனாதிபதி அநுராவின் தேசியமக்கள் சக்தி வட, கிழக்கு மாகாணங்களைப் பிரிக்க உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது.2006 அக்டோபர் 16 ல் வடகிழக்கு இணைப்பு செல்லுபடியாகாதென உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.



2008,மே,10, ல் முதலாவது கிழக்குமாகாணசபை தேர்தல் இடம்பெற்றது அந்த காலம் வடகிழக்கில் இருந்து தெரிவான தமிழ்தேசிய கூட்டமைப்பு 22, பாராளுமன்ற உறுப்பினர்களும் சொந்த மாவட்டங்களுக்கு செல்லமுடியாத கொலை அச்சுறுத்தல் மகிந்தரஷபக்ஷ அரசில் இருந்தது. அதனால் தமிழ்தேசிய கூட்டமைப்பு அந்த தேர்தலில் போட்டியிடவில்லை. ஆளும் கட்சியாக இருந்த ஜனாதிபதி மகிந்தராஷ பக்ஷவின் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி வெற்றிலைச்சின்னத்தில் போட்டியிட்டு பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் முதலமைச்சரானார்.

2012, செப்டம்பர்,08, ல் இரண்டாவது கிழக்கு மாகாணசபை தேர்தலில்தான் தமிழ்தேசிய கூட்டமைப்பும் போட்டியிட்டது. 2012 தேர்தலில் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசு, மக்கள் விடுதலை முன்னணிஉட்பட 13 அரசியல் கட்சிகளும் 21 சுயேட்சைக் குழுக்களும், அம்பாறை மாவட்டத்தில் 16 அரசியல் கட்சிகளும் 18 சுயேட்சைக் குழுக்களும், திருகோணமல மாவட்டத்தில் 16 அரசியல் கட்சிகளும் 16 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டன. கிழக்கு மாகாண சபையின் மொத்த வேட்பாளர்கள் 1470. போட்டியிட்டு 37, உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அதில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி, (ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஷ் இணைந்து) 200, 044 வாக்குகளை பெற்று 14, ஆசனங்களையும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு 193,827, வாக்குகளைப்பெற்று 11, ஆசனங்களையும் ஸ்ரீலங்கா முஷ்லிம் காங கிரஷ் 07, ஆசனங்களையும், ஐக்கியதேசிய கட்சி 74,901, வாக்குகளை பெற்று 04, ஆசனங்களையும், விமல்வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி 9,522 , வாக்குகளை பெற்று 01ஆசனத்தை யும் பெற்று மொத்தமாக 37, உறுப்பினர்கள் தெரிவானார்கள்.



இனரீதியாக கிழக்கு மாகாண சபைக்கு 15 முஸ்லிம்கள், 12 தமிழர்கள், 08 சிங்களவர்கள் தெரிவானார்கள். கிழக்கு மாகாண முதலமைச்சராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி சார்பில் தெரிவான மு. நஜீப் அப்துல் மஜீத் 2012 செப்டம்பர் 18,ல் பதவி ஏற்றார்.

2015, ஜனவரி,08, ல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்பு மைத்திரி பால ஸ்ரீசேனாவை பகிரங்கமாக ஆதரித்தனர் அவர் வெற்றிபெற்றபின்னர் தமிழ்தேசிய கூட்டமைப்பு அவருடன் இணைந்து பணியாற்றுவதற்கு ஒப்புக்கொண்டனர் அதற்கான காரணம் புதிய அரசியல் யாப்பு மூலம் இனப்பிரச்சனைக்கான தீர்வை காண்பதற்காக என்ற சிந்தனை தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு இருந்தது.

கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த கிண்ணியாவை சேர்ந்த நஜீப் அப்துல் மஜீத் தானாகவே 2015, பெப்ரவரி மாதம் 05, ம் திகதி பதவி விலகிய நிலையில் 2015, பெப்ரவரி,06,ல் முதலமைச்சராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஷ் கட்சியை சேர்ந்த ஏறாவூர் நசீர் அஹமட் நியமிக்கப்பட்டார். ஜனாதிபதி மைத்திரியுடனான இணக்கப்பாட்டால் கிழக்கு மாகாணசபையில் ஆளும் தரப்பாக கூட்டு அரசாக தமிழ்தேசிய கூட்டமைப்பும் இணைந்து செயல்பட முடிவு எடுத்தது. இதன் காரணமாக கிழக்கு மாகாணசபையிலும் ஆளும் தரப்பு ஆட்சியில் பங்காளிகளாக 2015,மார்ச்,04, ல் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு விவசாய அமைச்சராக கி.துரைராசசிங்கமும், கல்வி அமைச்சராக தண்டாயுதபாணியும், சபை பிரதி தலைவராக பிரசன்னா இந்திரகுமாருக்கும் பதவி வழங்கியபோதும் முதலமைச்சர் பதவி தொடர்ந்தும் ஏற்கனவே பதவியில் இருந்த நசீர் அஹமட்க்கு விட்டுக்கொடுத்தனர்.

இதனால் தமிழர்கள் மத்தியில் முதலமைச்சர் பதவியை விட்டுக்கொடுத்ததாக தமிழ்தேசிய கூட்டமைப்பு மீது பல விமர்சனங்கள் இன்றுவரை தொடர்வதை காணலாம். கிழக்குமாகாணசபையில் தமிழ்தேசிய கூட்டமைப்பு ஏனைய ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி, ஸ்ரீலங்கா முஷ்லிம் காங்கிரஷ், ஐக்கிய தேசிய கட்சி, ஆகியவை இணைந்து கூட்டாக கிழக்கு மாகாணசபை ஆட்சி இயங்கியது.



இந்த நிலையில் 2015, ஆகஷ்ட்,17, ல் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்பு 16, ஆசனங்களுடன் எதிர்கட்சியாக செயல்பட்டாலும் ஆட்சியமைத்த ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணிலுடன் நல்லாட்சி எனும் பெயருடன் ஆட்சியில் பங்காளர்களாக மாறினர். அரசியல் தீர்வுக்காக தமிழ்தேசிய கூட்டமைப்பு கெஞ்சிக்கூத்தாடியும் ஜனாதிபதி மைத்திரியும்,பிரதமர் ரணிலும் அவர்களை ஏமாற்றிவிட்டனர் என்பது வரலாறு.

தற்போது மாகாணசபை தேர்தலை விரைவாக நடத்துமாறு எதிர்கட்சிகள், இந்திய அரசு அழுத்தம் கொடுக்கும் நிலையில் இந்த ஆண்டு 2026, இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு 2027, ல் மீண்டும் கிழக்கு மாகாண சபை தேர்தல் இடம்பெற்றால் கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசிய கட்சிகள் பிரிந்து தனித்தனியாக தேர்தலுக்கு முகம் கொடுத்தால் தமிழர்கள் வாக்குகள் சிதறும் நிலையில் தமிழர்களின் பிரதிநித்துவம் குறையவே வாய்ப்புள்ளது.

பிரதான தாய்க்கட்சியாக கருதப்படும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி கடந்த 2024, ஜனவரி,21, தொடக்கம் இரண்டு அணியாக செயல்படுவதும், நீதிமன்றில் வழக்கில் கட்சி உள்ளதும் தமிழர்கள் மத்தியில் அதிருப்திநிலை உள்ளது.



தேசிய மக்கள் சக்தியை வடகிழக்கில் தொடவிட மாட்டோம் என கடந்த 2026, மே,01 ல் மாங்குளத்தில் தமிழரசு கட்சி மேதினத்தில் அதன் பதில் பொதுச்செயலாளர் எம் ஏ சுமந்திரன் உரையாற்றிவிட்டு சரியாக 19, தினத்தால் அதுவும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை 17, ம் ஆண்டு நினைவு 2026, மே,18, ல் நடந்து இரு தினங்களில் மட்டக்களப்பு பொது நூலக திறப்பு விழாவில் அழைப்பு அதிதியாக கலந்துகொண்ட ஜனாதிபதி அநுராவுடன் அழைப்பு இன்றி கலந்துகொண்ட அதே எம் ஏ சுமந்திரன் அவரை தொட்டு உறவாடி சிரித்துப்பேசிய காட்சிகளை காணமுடிந்தது.

ஊருக்கு உபதேசம் உனக்கில்லை என்ற நிலையில் தமிழரசுக்கட்சியின் செயல் மாறியுள்ளது இதனாலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக்கட்சிக்கு இருந்த ஆதரவு குறைந்துள்ளது.

இறுதியாக 2012, கிழக்கு மாகாணசபை தேர்தலில் இனரீதியாக கிழக்கு 15 முஸ்லிம்கள், 12 தமிழர்கள், 8 சிங்களவர்கள் தெரிவானார்கியது போல் சிலவேளை முஸ்லிம் உறுப்பினர்கள் 17, ஆகவும், சிங்கள உறுப்பினர்கள் 10, ஆகவும் உயர்ந்து தமிழ் உறுப்பினர்கள் 10, ஆகவும் குறையவும் வாய்ப்புள்ளது.

தமிழர்கள் 10, ஆசனங்களில் தற்போதைய ஆளும் தரப்பான தேசிய மக்கள் சக்திக்கும் தமிழர் பிரதிநித்துவம் 03, அல்லது 04, சிதறுவதற்கும் வாய்புள்ளதை அவதானிக்க முடிகிறது.

தமிழர் பிரதிநித்துவத்தை தக்கவைக்க அல்லது கூட்ட வேண்டுமானால் தமிழ்தேசிய கட்சிகளாக கடந்த 2009, மே,18, க்கு பின்னர் சிதறி தற்போது 13, கட்சிகளாக உள்ளவர்கள் ஒரு குடையில் ஒரு சின்னத்தில் கிழக்கு மாகாணசபை தேர்தலை சந்தித்தால் மட்டுமே தமிழர்க ளின் பிரதிநித்துவத்தை அதிகரிக்கமுடியும் என்ற உண்மையை தமிழ்தேசிய கட்சிகளை வழி நடத்துபவர்கள் சிந்திக்க வேண்டும்.

அதே வேளை தேர்தலுக்கு முன்னர் வேறு எந்த முஷ்லிம் கட்சிகளுடனும் இரகசியமாகவோ, வெளிப்படையாகவோ தமிழ்தேசிய கட்சிகள் யாராவது ஒப்பந்தம் செய்தால் அதுவும் தமிழர்களின் வாக்குகளில் வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்ற உண்மையை அப்படியான கட்சிகள் உணரவேண்டும்.

தேர்தல் முடிந்ததன் பின்னரே யாருடன் கூட்டுச் சேர்வது எப்படி பதவிகளை பங்கீடு செய்வது என்பவற்றை தீர்மானிக்கவேண்டுமே தவிர கிழக்கு மாகாண சபை தேர்தலுக்கு முன்னம் இவ்வாறான கதைகளை தவிர்பதே ஆரோக்கியமானதாகும்.

• • •



## நிவாரண அனுகுமுறையா, உரிமை அனுகுமுறையா?

# மலையக மீள்குடியேற்ற சவால்

மருதன் ராம்

மலையக பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை பல தசாப்தங்களாக ஒரு நிரந்தர அசாதாரண நிலையிலேயே தொடர்கிறது. இயற்கை அனர்த்தம், பொருளாதார நெருக்கடி, தோட்ட நிர்வாகங்களின் அலட்சியம், காணி உரிமையின்மை, பாதுகாப்பற்ற குடியிருப்புகள், குறைந்த உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி மற்றும் சுகாதார வசதி கள் பற்றாக்குறை என பல விதங்களாக மலையக சமூகத்தின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வந்துள்ளது.



இந்த நீண்டகால கட்டமைப்பு பிரச்சினைகளை "டித்வா"சூறாவளிமிகத்தெளிவாகவெளிப்படுத்தியிருக்கிறது. மலையக பகுதிகளில் டித்வா சூறாவளி ஏற்படுத்திய சேதங்கள் வெறும் வீட்டு சேதங்களாக மட்டுமல்லாது அது ஒரு சமூகத்தின் வரலாற்று புறக்கணிப்பை மீண்டும் வெளிச்சமிட்டுக் காட்டிய பேரழிவாகும். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வீடுகளை இழந்தன. நூற்றுக்கணக்கான உயிர்கள் பாதிக்கப்பட்டன.



வாழ்வாதாரங்கள் சிதைந்தன. பலர் இன்னும் கூடாரங்களிலும் தற்காலிக முகாம்களிலும் வாழ்கின்றனர். இந்தப் பின்னணியில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் நடைபெற்ற பதுளை, நுவரெலியா, கண்டி மற்றும் மாத்தளை மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள், அரசாங்கம் இந்தப் பேரழிவை எவ்வாறு அணுகுகிறது என்பதை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, மீள்குடியேற்றம், வீடமைப்பு, காணி ஒதுக்கீடு, நஷ்டஈடு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வாழ்வாதார மீட்பு ஆகிய விடயங்களில் அரசாங்கம் எடுத்துக்கொண்ட நிலைப்பாடு கள் இந்தக் கூட்டங்களில் தெளிவாக முன்வைக்கப் பட்டுள்ளன.



ஆனால், இக்கூட்டங்களில் முக்கியமான ஒரு உண்மை மீண்டும் வெளிப்பட்டுள்ளது. மலையக மக்களின் பிரச்சினைக்கு தற்காலிக நிவாரணங்களோ, வீட்டு திட்டங்களோ மட்டும் போதாது. காணி உரிமையுடன் கூடிய நிரந்தர குடியிருப்பே இறுதியான தீர்வாகும். ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற மாவட்டங்களின் ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களின் போது வெளிப்படுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையில், பதுளை மாவட்டத்தில் டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பாதிப்புகள் மிகப்பெரிய அளவில் பதிவாகியுள்ளன.

குறிப்பாக 26,517 குடும்பங்களைச் சேர்ந்த 90,667 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 77 தோட்ட வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன் 507 வீடுகள் பகுதி அளவிலும் சேதம் அடைந்துள்ளன. மீள்குடியேற்றப்பட வேண்டிய மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 3,434 ஆகும். இந்த தரவுகள் வெறும் புள்ளிவிவரங்கள் அல்ல. இவை ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் வாழ்விட பாதுகாப்பை முழுமையாக இழந்துள்ளதை காட்டுகின்றன. குறிப்பாக, "அதிக ஆபத்து" என அடையாளப்படுத்தப்பட்ட வீடுகள், மலையக தோட்டக் குடியிருப்புகள் எவ்வளவு பாதுகாப்பற்ற நிலையில் இருந்தன என்பதையும் வெளிப்படுத்துகின்றன.



இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி, தனியார் நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ள அரச காணிகளை மீள்குடியேற்றத்திற்காக விரைவாக விடுவிக்குமாறு அறிவுறுத்தினார். இது ஒரு முக்கியமான முன்னேற்றமாக பார்க்கப்படலாம். ஏனெனில், மலையக மக்களின் வீடமைப்பு பிரச்சினையின் மையத்தில் எப்போதும் காணி உரிமை பிரச்சினையே இருந்து வந்துள்ளது.

அதேபோல நுவரெலியா மாவட்டத்தில் பதிவான தரவுகள் மிகவும் அதிர்ச்சிகரமானவை.

* **பாதிக்கப்பட்ட குடும்பங்கள் – 18,266**
* **பாதிக்கப்பட்ட மக்கள் – 61,833**
* **முழுமையாக சேதமடைந்த தோட்ட வீடுகள் – 675**
* **முழுமையாக சேதமடைந்த கிராமப்புற வீடுகள் – 1,565**
* **பகுதியளவில் சேதமடைந்த தோட்ட வீடுகள் – 612**
* **உயிரிழப்புகள் – 93**



இந்த தரவுகள் நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் ஜனாதிபதி முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டதுடன் இவை டித்வா பேரழிவின் மையப் பகுதியாக நுவரெலியா மாவட்டம் இருந்ததை காட்டுகின்றன. குறிப்பாக தோட்டப்பகுதிகளில் ஏற்பட்ட வீட்டு சேதங்கள், பெருந்தோட்ட வரிசை வீடுகளின் ஆபத்தான நிலையை மீண்டும் வெளிக்கொண்டு வந்துள்ளன.

ஜனாதிபதி இந்தக் கூட்டத்தில் மிகவும் முக்கியமான ஒரு கருத்தை முன்வைத்தார். நிரந்தர வீடுகள் கட்டி முடிக்

**தொடர்ச்சி: பக்கம் 15**




# அறுபது ஆண்டுகால சுழற்சியை உடைத்த ஜென் Z தலைமுறை

தமிழில்: **ஆர்தீகன்**

பழங்காலக் கோயில்கள், செழிப்பான உற்பத்தித் துறை மற்றும் அரசியல் இருமுனை ஆதிக்கத்திற்குப் பெயர் பெற்ற தென்னிந்திய மாநிலமான தமிழ்நாட்டில், கடந்த வாரம் ஒரு அரசியல் நாடகம் அரங்கேறியது. அறுபது ஆண்டுகளாக, திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக) மற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அதிமுக) ஆகிய இரண்டு சக்திவாய்ந்த பிராந்தியக் கட்சிகளிடையே இவ்மாநிலத்தில் ஆட்சி மாறி மாறி வந்து கொண்டிருந்தது.



இருப்பினும், கடந்த வாரம், பிரபல நடிகரும் அரசியல்வாதியுமான விஜய் மற்றும் அவரது புதிதாக உருவாக்கப்பட்ட தமிழக வெற்றி கழகம் (திவக) கட்சி, தமிழ் நாடு சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் இந்த சகாப்தம் முடிவுக்கு வந்தது.

ஞாயிற்றுக்கிழமை விஜய் மாநில முதலமைச்சராகப் பதவியேற்றார். இந்த விழா, ஒரு வார கால அரசியல் நிச்சயமற்ற நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. ஏப்ரல் மாதத் தேர்தலில் தவெக கட்சி 108 இடங்களை வென்றது (அதன் முடிவுகள் மே 5 அன்று அறிவிக்கப்பட்டன).


இது ஒரு அசாதாரணமான தொடக்கமாக இருந்த போதிலும், பெரும்பான்மைக்குத் தேவையான 118 இடங்களைப் பெறுவதற்கு கட்சிக்கு இன்னும் பத்து இடங்கள் குறைவாகவே இருந்தன (தமிழ்நாடு சட்டமன்றத்தில் 234 உறுப்பினர்கள் உள்ளனர்).

கடந்த வாரம் விஜய் தனது உரிமையை நிலைநாட்ட ஆளுநரைச் சந்தித்தபோது, அவரால் 113 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவை மட்டுமே வெளிப்படுத்த முடிந்தது – இதில் TVK-வின் சொந்த இடங்களும், கூட்டாட்சி அளவில் ஒரு முக்கிய எதிர்க்கட்சியான இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி வென்ற ஐந்து இடங்களும் அடங்கும் (TVK-வை ஆதரிப்பதற்காக காங்கிரஸ் தனது பாரம்பரிய கூட்டாளியான திமுகவுடனான உறவைத் துண்டித்தது).



பின்னர், இடதுசாரிக் கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி-மார்க்சிஸ்ட், மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய இரண்டு சிறிய கட்சிகளும் விஜய்க்கு ஆதரவளித்து, தேவையான ஆதரவை வழங்கின.

புதன்கிழமை, விஜய் சட்டமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பை நிறைவேற்றினார். இதில் அவர் 144 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றார் – இது பெரும்பான்மைக்குத் தேவையான 118 இடங்களை விட மிக அதிகம். திமுக மற்றும் தேமுதிக சட்டமன்ற உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்த நிலையில், பெரும் அரசியல் பரபரப்புக்கு மத்தியில் இந்த வாக்கெடுப்பு நடைபெற்றது.



இந்தத் தேர்தல் முடிவுகள், முன்பு ஆதிக்கம் செலுத்திய கட்சிகளுக்கும் வெளியாட்களுக்கும் ஆச்சரியத்தை அளித்தன. பல தசாப்தங்களாக மாநிலத்தில் அரசியலை வழிநடத்தி வந்த பழைய அரசியல் அமைப்புக்கு இது ஒரு பின்னடைவை ஏற்படுத்தியது. திமுகவின் தலைவரான, தற்போதைய முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தனது தொகுதியில் தோல்வியடைந்தார். ஆட்சியில் மாற்றத்தைக் காண விரும்புவது ஜென் Z வாக்காளர்கள்தான் என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.




தமிழில் ‘தளபதி’ எனத் தனது ரசிகர்களால் அழைக்கப்படும், தமிழ் திரையுலகின் 51 வயதான அடையாளச் சின்னமான விஜய், இந்த அலையின் மையத்தில் இருக்கிறார்.

திரைத்துறையில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலான அனுபவமுள்ள ஒரு மூத்த கலைஞரான விஜய், தமிழ்நாட்டிற்கு வெறும் நடிகர் மட்டுமல்ல. அவர் பிரமிக்க வைக்கும் நடனங்களை ஆடுகிறார். விஜய்யின் அரசியல் பிரவேசம் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு, அவர் தனது வாக்காளர்களுக்கும், குறிப்பாக ஜென் Z வாக்காளர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.




“இந்தத் தேர்தல் இந்திய அரசியலை உலுக்கும் ஒரு குறிப்பிடத்தக்க தேர்தலாக இருக்கும் என்று நாங்கள் கூறினோம், அது பல வழிகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது,” என்று விஜய் கூறினார்.

“பல காரணிகளில், இந்த அசாதாரணத் தேர்தலுக்குப் பின்னால் உள்ள ஆழமான காரணங்களில் ஒன்று, தங்கள் உறுதியான நம்பிக்கையின் மூலம் தங்கள் குடும்பங்களுக்கு வழிகாட்டிய பிள்ளைகள்தான்,” என்று ஜென் Z வாக்காளர்களைக் குறிப்பிட்டு அவர் மேலும் கூறினார்.

“டிவிகே மாற்றத்திற்கான ஒரு முக்கிய உந்து சக்தியாக உருவெடுத்துள்ளது” என்று விஜய் கூறி னார். கட்சிக்கு எதிரான இணையவழி வெறுப்பை எதிர்த்துப் போராடுவதற்காக, தனது சமூக ஊடகப் பின்தொடர்பவர்களை “தனது மெய்நிகர் வீரர்கள்” என்று அவர் அழைத்தார்.

அமைப்பை எதிர்க்கும் ஒரு சாதாரண கதாநாயகனாக திரைப்படங்களில் நடித்து விஜய் தனது புகழை நிலைநாட்டினார், இது இறுதியில் அவரை அரசியலில் ஒரு வாழ்க்கைக்குத் தயார்படுத்தியது. 2024-ல், அவர் டிவிகே மூலம் அதிகாரப்பூர்வமாக அரசியலில் நுழைந்தார். இரண்டு ஆண்டுகள் மட்டுமே ஆன ஒரு கட்சிக்கு, 108 இடங்களை வென்றது ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

**தொடர்ச்சி: பக்கம் 13**

## தடம் புரளும் ... தொடர்ச்சி...

என்று நான்கு அணிகள் இயங்குவதாக மத்திய செயற்குழுக் கூட்டத்திலேயே பகிரங்கமாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் குறிப்பிட்ட 'பிளவுபட்டால் எந்தப் பக்கம் சேர்வது என்று தெரியாத மூன்றாவது அணி' மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிறிநாத் குறிப்பிட்ட 'பிளவு ஏற்பட்டால் என்ன செய்வது என்று தீர்மானித்துள்ள நான்காவது அணி' ஆகிய கூற்றுகள், கட்சியின் உள்ளகச் சிதைவை அம்பலப்படுத்தியுள்ளன.

கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றுவதற்காகவும், தமது தனிப்பட்ட அரசியல் எதிர்காலத்தைக் காப்பாற்றுவதற்காகவும் முக்கால் நூற்றாண்டுப் பாரம்பரியமிக்க பேரியக்கத்தை சிதைக்கப் பலர் துணிந்து விட்டனர். இந்தச் சூழலில், சிறிதரன் புதிய கட்சியைத் தொடங்குவதற்குத் தயாராகி வருவதாக வெளியாகும் தகவல்கள், தமிழரசுக் கட்சி உடையப் போகிறது என்பதற்கான எச்சரிக்கை மணியாகும்.

தந்தை செல்வா, அமிர்தலிங்கம், சம்பந்தன் போன்ற ஆளுமைகள் வழிநடத்திய இந்தக் கட்சி, தற்போது அனைவரையும் அரவணைத்துச் செல்லக்கூடிய தெளிவான, ஆளுமைமிக்க தலைமையின்றித் தவிக்கிறது.

பதில் பொதுச்செயலாளர் சுமந்திரனின் தன்னிச்சையான போக்குகள், கட்சியை தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளிலிருந்து விலக்கி, கொழும்பைமையப் படுத்திய தாராளவாத, இணக்க அரசியல் தளத்திற் குள் சரணாகதி அடைந்து வருகிறது.

கொள்கைகளும் தத்துவங்களும் மட்டுமே தேர்தல்களில் வெற்றியைக் கொடுத்துவிடும் என்ற காலம் வேகமாக மாறி வருகிறது. வரலாற்றில் இறுக்கமான வலதுசாரிக் கொள்கைகளும், இடதுசாரிக் கொள்கைகளும் வீழ்ச்சியடைந்து வரும் வேளையில், 60 ஆண்டுகாலத் திராவிடக் கட்சிகளின் ஆதிக்கமே தமிழகத்தில் சவாலுக்குள்ளாகியிருக்கிறது.

இத்தகைய உலகளாவிய மற்றும் பிராந்திய அரசியல் மாற்றங்களைப் புரிந்து கொண்டு, தமிழரசுக் கட்சி தன்னை சுயபரிசீலனை செய்து கொள்ளத் தவறிவிட்டது. இனியும் அந்தக் கட்சி அவ்விதமான செயற்பாடொன்றுக்கு தயாராகவும் இல்லை.

கடந்த பாராளுமன்றத் தேர்தல்களிலேயே தமிழ் மக்கள் மாற்றுத் தெரிவுகளை நோக்கி நகரத்தொடங்கி, தமிழரசுக் கட்சிக்கு தெளிவான முன்னெச்சரிக்கையைக் கொடுத்திருந்தனர். எனினும், 'வீட்டுச் சின்னம்' இருந்தால் மட்டுமே மக்கள் எப்போதும் வாக்களிப்பார்கள் என்ற மட்டற்ற அகந்தையில் கட்சியின் தற்போதைய அதிகாரமிக்க சுமந்திரன் அணியினர் இன்னும் இருப்பார்களாக இருந்தால் அதன் விளைவுகள் அவர்களுக்கு மட்டுமல்ல தமிழர்களின் எதிர்காலத்துக்கும் பாரதூரமாகவே இருக்கும்.

அதுமட்டுமன்றி சுமந்திரனின் மாறுபட்ட தந்திரோபாய நகர்வுகளால் சிறிதரன் போன்ற மக்கள் செல்வாக்குள்ள தலைவர்கள் வெளியேற்றப்பட்டு, கட்சி நான்கு துண்டுகளாகச் சிதறுமானால், அது தமிழ் தேசியப் பரப்பில் பெரும் அரசியல் வெற்றிடத்தை ஏற்படுத்தும்.

தமிழ் மக்களின் உரிமைக் குரலாய் ஒலித்த ஐம்பதாண்டு காலப் பாரம்பரியம் மிக்க இந்த இயக்கம், தங்களின் சுயநலத் தலைமைத்துவப் போட்டியால் தடம் புரண்டு அழிவதைத் தடுக்க, தற்போதைய சுயநலத் தலைமைகள் தங்களை சுயவிமர்சனம் செய்துகொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

விசேடமாக கட்சியின் அனைத்து அதிகாரங்களையும் தன்வசம் வைத்து காய் நகர்த்தும் சுமந்திரன் கடந்த காலவிடயங்களை மறந்தாலும், இந்த மாதத்தின் இதுவரையிலான அவரது பகிரங்க கருத்துக்களை மீட்டிப் பார்த்தாலே பல விடயங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க அவரால் முடியும். இல்லையேல் தமிழ் மக்களால் முடியும். இம்மாதத்தின் முதலாம் திகதியான மே தின உரையில் ஜே.வி.பி.தலைமையிலான தேசிய மக்கள் சக்தியை வடக்கு,கிழக்கில் காலூன்ற விடமாட்டோம் என்று அறிவித்தார்.

இரண்டாம் திகதி கொழும்பு இராமகிருஷ்ணன் மண்டபத்தில் நடைபெற்ற கம்பன் புகழ் விருதில் ஜனாதிபதி அநுரவுடன் கூட்டிணைந்து, பங்கேற்று நட்பு பாராட்டினார்.

பேரவல நாளான மே 18இல் முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை நிகழ்ந்தது என்பதற்கு சான்றுகள் இல்லை என்று வாதிட்டவர் திடீரென மாற்றமடைந்து இனப் படுகொலை என்பதை ஏற்று மறக்கவோ மன்னிக்கவோ மாட்டோம் என்றுரைத்தார்.

மே 20 இல் அவர் வழிநடத்தும் கட்சியின் ஆளுகைக்குள் உள்ள மாநகர சபைக்குள் ஜனாதிபதி அநுரவை அழைத்து ஒன்றாக நினைவுக்கல் திரை நீக்கம் செய்யும் மனோநிலைக்கு திடீரென்று மாறினார்.

இந்த மாறுபட்ட வெளிப்பாடுகளை அவர் மனச்சாட்சியுடன் மீள்பரிசீலனை செய்து கொண்டாலே பல பிரச்சினைகளுக்கு அவராலே தீர்வினைக் காண முடியும். இல்லையென்றால் ஏலவே குறிப்பிட்டதைப் போன்று மேற்படி நான்கு விடயங்களை மட்டும் தமிழ் மக்கள் நான்கு தடவைகள் மீட்டிப்பார்த்தால் அவர்களாலேயே பல விடயங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

• • •

## வலி.வடக்கு காணி ... தொடர்ச்சி...

எதிர்வரும் வெசாக் தினத்தில் அப்பகுதி முழுவதும் கருப்பு கொடிகள் பறக்க விடப்பட்டு பாரிய அளவில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கு அரசியல்வாதிகள் அரச நிர்வாக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அனைவரையும் ஆதரவு தருமாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 1958ம் ஆண்டு இனப்படு ... தொடர்ச்சி...

இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற முதலாவது பெரும் இனவெறித்தாக்குதலும் இனப்படுகொலை ஆரம்பமும் ஆகும். இது 1956 ஜூன் 11 ல் ஆரம்பித்து 1956 ஜூன்16 வரை தொடர்ந்து ஐந்து நாட்கள் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. 1956 ல் தொடங்கிய இனப் படுகொலை 2026 வரை 70 ஆண்டுகளாக தொடர்கிறது.!

## அறுபது ஆண்டுகால ... தொடர்ச்சி...

நிபுணர்களின் கூற்றுப்படி, ஏற்கனவே நிறுவப்பட்ட கட்சிகளில் சேர்ந்து அரசியலில் நுழையும் பெரும்பாலான பிரபலங்களைப் போலல்லாமல், விஜய் சுயமாகக் களமிறங்கி, 1967 முதல் தமிழக அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வரும் இரண்டு ஜாம்பவான்களுக்கு எதிராக தன்னை ஒரு மூன்றாவது தேர்வாக முன்வைத்தார்.

"எனது வெற்றிக்குப் பிறகு, நான் பொதுப் பணத்தில் ஒரு பைசா கூட வாங்க மாட்டேன். எனது ஆட்சியில் ஊழல் இல்லை என்பதை நான் உறுதி செய்வேன். பெண்களின் பாதுகாப்பை நான் உறுதி செய்வேன்," என்று தேர்தலுக்கு முன்னதாக விஜய் கூறினார்.

டிவிகே தலைவர் தனது கட்சியின் இளைஞர் செயல் திட்டத்தில் நான்கு முக்கிய நடவடிக்கைகளை அறிவித்தார். கல்வி உத்தரவாதத் திட்டத்தின் கீழ், 12 ஆம் வகுப்பு முதல் பிஎச்.டி பட்டம் வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு எந்தவித உத்தரவாதமும் இன்றி 20 லட்சம் ரூபாய் ($21,000) கடன் வழங்கப்படும். பங்கேற்பாளர்களுக்கு மாதந்தோறும் 18,000 ரூபாய் ($190) உதவித்தொகை வழங்கப்படும். மேலும், இளைஞர்கள் முதலமைச்சர் மற்றும் அரசு அதிகாரிகளுடன் தொடர்புகொள்வதற்கான ஒரு தளமாக இதை முன்வைத்து, தமிழ்நாடு இளைஞர் ஆலோசனைக் குழுவை அமைப்பதாகவும் விஜய் உறுதியளித்தார்.

விஜய்யால் தேர்ந்தெடுக்கப்பட்ட போட்டியாளர்கள், 234 தொகுதிகளின் குடிமக்களாக இருந்தனர். அவர்கள் தொழில்முறை அரசியல்வாதிகளாகக் கருதப்படாமல், வாக்காளர்களின் 'குடும்ப உறுப்பினர்களாகவே' கருதப்பட்டனர். தற்போதைய திமுக அரசு ஊழல், திருட்டு மற்றும் பத்திரிகையாளர்களைக் குறிவைப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

இந்தத் தேர்தலில் இளைஞர்களும் புதிய வாக்காளர்களும் உருவெடுத்தனர். அதிமுகவின் 'இரட்டை இலை' மற்றும் திமுகவின் 'உதயசூரியன்' அரசியலால் தங்கள் வாழ்க்கை ஆதிக்கம் செலுத்தப்பட்ட ஜென் Z தலை முறைக்கு, 60 ஆண்டுகால சுழற்சியை உடைக்கும் வாய்ப்பை விஜய் வழங்கினார்.

"எல்லா இடங்களிலும் உள்ள இளைஞர்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள், அதுதான் இங்கே நடந்தது," என்று சென்னையைச் சேர்ந்த 23 வயதான கணினி அறிவியல் பொறியாளர் ரூபா வரதராஜன் கூறினார்.

"எங்களுக்கு ஒரு புதிய அரசியல் அலை தேவைப்பட்டது, எங்கள் மாநிலத்தில் ஒரு மாற்றம் தேவைப்பட்டது. இளைஞர்களின் பிரச்சினைகள், வேலை யின்மை, போதைப்பொருள் பிரச்சினை, படித்த பெண்களின் பிரச்சினைகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளும் ஒருவர் தேவைப்பட்டார். இவை அனைத்தும் இப்போது மாறும் என்று நாங்கள் நம்புகிறோம்," என்று அவர் மேலும் கூறினார். விஜய்யின் வாக்குறுதிகள், வேலையில்லாத இளம் பட்டதாரிகளிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அவரது தேர்தல் அறிக்கையில், பெண் குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் 2,500 ரூபாய் ($26) உதவித்தொகை, ஒரு கட்டமைக்கப்பட்ட மாநில ஆட்சேர்ப்பு அட்டவணை, பயிற்சி சார்ந்த உதவித்தொகைகள், ஸ்டார்ட்அப் கடன்கள், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், மற்றும் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை இலக்காகக் கொண்ட செயற்கை நுண்ணறிவு சார்ந்த வளர்ச்சித் திட்டம் ஆகியவை அடங்கியிருந்தன.

விஜய்யின் பிரச்சாரம், காட்சிவழி கதைசொல்லலை பெரிதும் நம்பியிருந்தது - குறும்படங்கள், சினிமா குறிப்புகள், மற்றும் இணையத்தில் பின்தொடர்பவர்களுடன் ஒரு தனிப்பட்ட, கிட்டத்தட்ட இன்ஃப்ளூயன்சர் பாணியிலான தொடர்பு.

"பல்கலைக்கழக வளாகங்களிலும், சிறு நகர தேநீர் கடைகளிலும், 2026 தேர்தல் ஒரு இளைஞர் கிளர்ச்சி போல உணரப்பட்டது," என்று அங்கு வசிக்கும் ஆலன் ஜோசப் கூறினார். "தமிழ்நாட்டில் அதிக இளைஞர் மக்கள் தொகை உள்ளது; லட்சக்கணக்கான முதல் மற்றும் இரண்டாம் முறை வாக்காளர்கள் விஜய்யின் திரைப்படங்களைப் பார்த்து வளர்ந்தவர்கள்."

வேலையின்மை, தேர்வுத் தகவல் கசிவுகள், ஊழல் முறைகேடுகள் ஆகியவற்றால் ஏற்பட்ட விரக்தி மற்றும் திமுக, அதிமுக ஆகிய இரண்டு கட்சிகளுமே யதார்த்தத்திலிருந்து மிகவும் விலகிவிட்டதாக உணர்ந்ததன் விளைவாக, இந்தப் புதிய கட்சி ஒரு கருவியாக மாறியது என்றும் அவர் கூறினார். தமிழ்நாடு தென்கிழக்கு இந்தியாவில் அமைந்துள்ளது. சுமார் 77 மில்லியன் மக்கள்தொகையுடன், பொருளாதார அடிப்படையில் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் உள்ளது; இது ஜெர்மனியின் மக்கள்தொகைக்கு சமமானதாகும். பல தசாப்தங்களாக, சமூக நீதி, மதச்சார்பின்மை மற்றும் பிராந்திய சுயாட்சி ஆகியவற்றை வலியுறுத்தும் ஒரு சமூக-அரசியல் சித்தாந்தமான திராவிட அடையாளத்தை நிலைநிறுத்துவதில் இந்த மாநிலம் பெருமை கொள்கிறது. 1967 முதல், அந்த திராவிட பாரம்பரியத்தின் கிளைகளான திமுக மற்றும் அதிமுக இடையே ஆட்சி மாறி மாறி வந்து கொண்டிருக்கிறது.

எம். கே. ஸ்டாலின் தலைமையிலான திமுக, 2011 முதல் 2016 வரை (கூட்டணிப் பாத்திரங்களில்) மாநிலத்தை ஆட்சி செய்து, பின்னர் 2021-ல் மீண்டும் ஆட்சிக்கு வந்தது. 2026-க்குள், அது தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் ஆட்சியில் இருந்த நிலையில், மீண்டும் ஒருமுறை ஆட்சிக்கு வரப் போட்டியிட்டது. மாநிலத்தில் ஏராளமான நலத்திட்டங்கள் இருந்தபோதிலும், முன்னெப்போதும் இல்லாத ஆட்சிக்கு எதிரான அலையால் அது கடுமையாகப் பாதிக்கப்பட்டது. ஊழல் மற்றும் 'குடும்ப ஆட்சி' ஆகியவை வாக்காளர்கள் சுட்டிக்காட்டிய சில காரணிகளாகும்.

முன்னாள் முதலமைச்சரின் மகனான உதயநிதி ஸ்டாலின், சேப்பாக்கில் தனது தொகுதியில் வெற்றி பெற்றார், அதே நேரத்தில் எம். கே. ஸ்டாலின் தனது கொளத்தூர் தொகுதியில் அவமானகரமான தோல்வியைச் சந்தித்தார்.

கடந்த 50 ஆண்டுகளில் தென்னிந்திய அரசியலில் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றம் இந்தத் தேர்தல் என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

ஏப்ரல் 2026-ல், தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் மற்றும் அசாம் ஆகிய நான்கு மாநிலங்களிலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெற்றன. இது இந்தப் பிராந்தியங்களின் அரசியல் நிலப்பரப்பை வியத்தகு முறையில் மாற்றியது.தென்னிந்திய மாநிலங்களில் ஆளும் கட்சிகளுக்கு எதிராகத் தெளிவான மக்கள் ஆணை கிடைத்தது. மேலும், மேற்கு வங்கத்தில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆளும் பாஜக, 207 இடங்களில் வெற்றி பெற்று முன்னெப்போதும் இல்லாத மாபெரும் வெற்றியைப் பதிவு செய்தது. இந்த வெற்றி இன்னும் பெரிய ஆச்சரியத்தை அளித்தது.

'தமிழ்நாட்டில் உள்ள ஜென் Z தலைமுறையினர் பொது வாழ்வில் கண்ணியத்தை விரும்புகிறார்கள்' தமிழ்நாட்டைச் சேர்ந்த அரசியல் விஞ்ஞானியும் வர்ணனையாளருமான பேராசிரியர் எஸ். நாராயண், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, விஜய் "இளம் வாக்காளர்களிடையே ஒரு புதிய தார்மீகக் கற்பனையைத் தட்டியெழுப்பியுள்ளார்" என்று வாதிட்டார்.

"தமிழ்நாட்டில் உள்ள ஜென் Z தலைமுறையினர் பொது வாழ்வில் கண்ணியத்தை விரும்புகிறார்கள். அவர்கள் ஊழல் மீதும், அதே சமயம் அரசு அலுவலகங்களில் அன்றாடம் சந்திக்கும் அவமானங்கள் மீதும் கோபமாக உள்ளனர். நேர்மையாகப் பேசும், ஊழலற்ற நாயகன் என்ற விஜய்யின் பிம்பம், பழைய கட்சிகள் குறைத்து மதிப்பிட்ட விதத்தில் சினிமாவிலிருந்து அரசியலுக்கு இடம்பெயர்ந்துள்ளது," என்று அவர் கூறினார்.

மூத்த அரசியல் நிபுணரும் ஆசிரியருமான முகுந்த் பத்மநாபன், இந்த முடிவுகளை ஒரு "கட்டமைப்புப் பிளவு" என்று விவரித்தார்.

50 ஆண்டுகளில் முதன்முறையாக, 'திராவிட இருகட்சி ஆதிக்கத்திற்கு' ஒரு தனி நபரால் மட்டுமல்ல, ஒரு புதிய மக்கள்தொகை யதார்த்தத்தாலும் சவால் விடுக்கப்பட்டிருப்பது 2026 தேர்தல்தான். விஜய் வெறும் இடங்களை மட்டும் வெல்லவில்லை; பாரம்பரியக் கட்சிகளைத் தங்கள் பெற்றோரின் காலத்து எச்சங்களாகக் கருதும் முதல் முறை வாக்காளரையும் அவர் வென்றார்.

தற்போதைக்கு, தமிழகத்தின் ஜென் Z வாக்காளர்கள் தங்கள் முடிவைத் தெளிவுபடுத்திவிட்டதாகக் கூறுகிறார்கள்: ஒரே அரசியல் திரைப்படத்தை மீண்டும் மீண்டும் பார்ப்பதில் அவர்கள் சோர்வடைந்துவிட்டனர்.

"நாங்கள் திரையரங்கின் இருளில் அவருக்கு ஆதரவளித்து வளர்ந்தோம், இப்போது விஜய்யின் கட்சி ஆட்சியில் சிறப்பாகச் செயல்படும் என்று எதிர்பார்க்கிறோம்," என்று மதுரையில் தனது குடும்பத்தின் தோல் வியாபாரத்தில் பணிபுரியும் 26 வயதான சாத் ஷேக் கூறினார்.

**நன்றி: ரஸ்யா ருடே**

• • •

## இனப்படுகொலைப் போரில்... தொடர்ச்சி...

குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் குறியீடாக இருக்கும் பாலச்சந்திரனை இன்றைய நாளில் நினைவுகொள்வது பொருத்தமானது.

பாலச்சந்திரன் என்ற பாலகன் இறுதிப் போரில் சரணடைந்த வேளையில், பிஸ்கட் கொடுக்கப்பட்டு இருத் தப்பட்ட கணமும் அவன் ஏதும் அறியாமல் ஏக்கத்துடன் தனித்திருந்த கணங்களும் பின்னர் அந்தப் பாலகனின் நெஞ்சில் இரும்புத் துப்பாக்கியால் துளையிட்டு இனப்படுகொலை செய்த கொடுமையும் உலகச் சிறுவர்களால் சகிக்க முடியாத பெருந்துயரம். அது மாத்திரமின்றி இறுதிப் போரில் எட்டு மாதக் குழந்தைகள் உட்பட 10 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் 29 பேரும், 15 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுமாக சுமார் ஐம்பதிற்கு மேற்பட்டவர்களும் இலங்கை அரசிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள் என்பது அதிர்ச்சியான வரலாறு ஆகும்.

### குழந்தைகள்மீதான இனப்படுகொலைகள்

நாகர்கோவில் படுகொலை, செஞ்சோலைப்படுகொலை, மன்னார் பள்ளிப் பேருந்துப் படுகொலை என சிறுவர்களின் குருதியால் நனைந்த ஈழ நிலம் காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளுக்காகவும் போராடிக் கொண்டிருக்கிறது. இப்படியாக மனித உரிமை மீறல்கள் என்பவை மிக மோசமான அணுகுமுறைகளால் இனவழிப்பாக நிகழ்ந்த மண்ணில் அதனை மூடி மறைக்க இலங்கை அரசு பெரும் பிரயத்தனப்பட்டு வருகிறது. ஆனால் பொறுப்புக் கூறலின் வழியாக நீதியை வழங்கும் ஆற்றுப்படுத்தலுக்காக ஈழ தேசம், தாயகம் கடந்து உலகப் பரப்பில் தொடர்ந்தும் போராடிக் கொண்டே இருக்கிறது.

இலங்கையில் இனப்படுகொலை நடக்கவில்லை என்று ஸ்ரீலங்காவின் இன்றைய வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் சொல்லியிருந்தார். இன்னொரு புறத்தில் இலங்கையில் போரே நடக்கவில்லை என்று இனப் படுகொலையாளி சவேந்திர சில்வா கூறினார். ராஜபக்சக்கள் தாம் நடாத்தியது வீரப் போர் என்றார்கள். அதற்காக ஐந்தாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் என்று எண்ணிக்கையைக்குறைத்தேனும் இனப்படுகொலைக்கு ஒப்புதல் வாக்குமூலம் செய்தார்கள். ஆனால் ராஜபக்சக்களை விடவும் நூதனமான இனவாத தரப்பு இன்று போரில் இனப்படுகொலை நடக்கவில்லை என்கிறது. இப்படியானவர்களின் மத்தியில்தான் குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளை நாம் பேசிக் கொண்டிருக்கிறோம்.

• • •

## ஈரான் போர் இலங்கையின்...

எதிர்கொள்கின்றனர்.

இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்தி வாரியத்தின் (EDB) படி, மார்ச் மாதத்தில் ஏற்றுமதி வருவாய் ஆண்டுக்கு ஆண்டு 17.3 சதவீதம் குறைந்து $114.75 மில்லியனாக உள்ளது.

மிகப்பெரிய தேயிலை வாங்குபவரான ஈராக்கிலிருந்து தேவை 38 சதவீதம் குறைந்ததாலும், கப்பல் மற்றும் போக்குவரத்து தளவாடங்களில் ஏற்பட்ட இடையூறுகளால் ஐக்கிய அரபு அமீரகத்திற்கான ஏற்றுமதி 93 சதவீதம் சரிந்ததாலும் இது ஓரளவு ஏற்பட்டது என்று EDB தரவுகள் காட்டுகின்றன.

"நாங்கள் சிறிது காலத்திற்கு செலவுகளைச் சமாளித்து வந்தோம், ஆனால் பெர்த் மற்றும் மெல்போர்ன் அல்லது கொழும்பு மற்றும் துபாய்க்கு இடையேயான போக்குவரத்து என எதுவாக இருந்தாலும், எரிபொருள் செலவுகள் மற்றும் அதன் தொடர் விளைவுகள் எல்லா இடங்களிலும் பணவீக்கத்தைத் தூண்டுகின்றன," என்று தில்மா சிலோன் தேயிலை நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி தில்ஹான் பெர்னாண்டோ கூறினார்.

• • •

## எபோலா நோய்ப் பரவல்... தொடர்ச்சி...

பணியாளர்களும் அடங்குவர். இது மருத்துவ வசதிகளுக்குள் நோய்ப் பரவல் ஏற்படக்கூடும் என்ற அச்சத்தை எழுப்பியுள்ளது.

பல நாடுகள் அவசரகாலக் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியுள்ளன. கடந்த 21 நாட்களுக்குள் டிஆர் காங்கோ, உகாண்டா அல்லது தெற்கு சூடானுக்குச் சென்ற வெளிநாட்டினர் நாட்டிற்குள் நுழைவதற்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.









## மட்டக்களப்பு: கால்நடை ... தொடர்ச்சி...

தேசிய அரசியல் பரப்பில் உள்ள அரசியல் கட்சிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எவ்வாறு முன்கொண்டு செல்லப்போகின்றார்கள் என்பதே மிகப்பெரும் கேள்வியாகவுள்ளது.

இந்த கூட்டத்தின்போது வலதுகரை மகாவலி அபிவிருத்தி திட்டம் 2021 கோத்தபாய ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்டு நிதி நெருக்கடியினால் இடைநிறுத்தப் பட்ட திட்டமாகவும்,இதன்மூலம் ஆயிரக்கணக்கான சிங்கள மக்களை விவசாயம் என்ற போர்வையில் குடியேற்றுவதற்கான முனைப்பினை கோத்தபாய அரசு மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுத்திருந்தது.அந்த திட்டத்தினை இந்த அரசாங்கம் மீண்டும் முன்னெடுப்பதற்காக 1000மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடுசெய்துள்ளதாக அறிவித்திருக்கின்றது.

அவ்வாறானால் மட்டக்களப்பு மாவட்டமும் பண்ணையாளர்களும் எதிர்காலத்தில் எதிர்கொள்ளப்போகும் பாரிய ஆபத்தினை தடுப்பதற்கான முன்னேடுப்புகள் எவ்வாறு எடுக்கப்போகின்றார்கள். இதுவரை காலமும் மட்டக்களப்பு மாவட்டம் மட்டும் இவ்வாறான திட்டமிட்ட குடியேற்றங்களுக்குள் அகப்படாத மாவட்டமாக இருந்து வந்தது. அதனையும் செய்வதற்கு சிங்கள தேசம் ஆயத்தமாகி வருகின்ற நிலையில் அதனை தடுப்பதற்கு பாரியளவிலான விழிப்புணர்வு வேலைத்திட்டங்களும் எதிர்செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவேண்டும்.

## நிலைமை மோசமடைவ ... தொடர்ச்சி...

பாதிக்கும் தேசியப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

எனவே இந்நிலைமை மேலும் மோசமடைவதற்கு முன்பாக, தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான அவசரகால தேசியத் தீர்வுகளை ஒன்றிணைந்து வகுப்பது அவசியமாகும். இதற்காகத் துரிதமான முறையில் சர்வ கட்சி மாநாடொன்றைக் கூட்டுமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் முறைப்படி வேண்டுகோள் விடுப்பதற்கு நாம் இங்கு ஒருமனதாகத் தீர்மானித்துள்ளோம் என்றார்.

## கியூபா மீது தாக்குதலுக்கு ... தொடர்ச்சி...

சுடப்படுவதற்கு முன்பு திசைமாறிச் செல்லுமாறு எச்சரிக்கப்பட்டதாகவும் கியூபா அப்போது கூறியது.

இந்தச் சம்பவத்தை நினைவுகூரும் வகையில் மியாமியில் நடைபெற்ற ஒரு விழாவுக்குச் சற்று முன்பு இந்தக் குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்பட்டது.

காஸ்ட்ரோ மற்றும் அவரது ஐந்து அதிகாரிகள் மீது, அமெரிக்கக் குடிமக்களைக் கொல்ல சதித்திட்டம் தீட்டியது, விமானங்களை அழித்தது, மற்றும் சுட்டு வீழ்த்தப்பட்டதில் கொல்லப்பட்ட ஒவ்வொரு கியூப-அமெரிக்கருக்கும் ஒரு கொலை என நான்கு கொலைக் குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டுள்ளன.

புதன்கிழமை முன்னதாக வெளியிட்ட ஓர் அறிக்கையில், "அமெரிக்க மண்ணிலிருந்து வெறும் தொண்ணூறு மைல் தொலைவில், விரோதமான வெளி நாட்டு இராணுவ, உளவுத்துறை மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் ஒரு முரட்டு நாட்டை அமெரிக்கா பொறுத்துக்கொள்ளாது" என்று ட்ரம்ப் கூறினார்.

இந்த வாரத் தொடக்கத்தில், குவாண்டநாமோ விரிகுடாவில் உள்ள அமெரிக்க இராணுவத் தளம் மற்றும் புளோரிடாவில் உள்ள கீ வெஸ்ட் போன்ற தொலைதூர இலக்குகள் மீதான தாக்குதலுக்காக கியூபா 300-க்கும் மேற்பட்ட இராணுவ ட்ரோன்களை வாங்கியுள்ளதாக நம்புவதாக அமெரிக்க உளவாளிகள் ஆக்சியோஸிடம் தெரிவித்தனர். இந்தக் கூற்றுகளை ஹவானா கேலி செய்ததுடன், இராணுவத் தலையீட்டிற்காக அமெரிக்கா ஒரு "போலியான வழக்கை" புனைவதாகக் குற்றம் சாட்டியது.

புதன்கிழமை முன்னதாக, மதுரோவுக்கு எதிரான நடவடிக்கைக்கு முன்னதாக மேற்கொள்ளப்பட்ட இராணுவக் குவிப்பைப் போலவே, யுஎஸ்எஸ் நிமிட்ஸ் விமானம் தாங்கிப் போர்க்கப்பல் குழு கரீபியன் பகுதிக்கு வந்தடைந்ததாக பென்டகன் அறிவித்தது.

## மாகாண சபை தேர்தல்... தொடர்ச்சி...

அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகளும் இக்குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டு, மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதில் காணப்படும் சட்ட ரீதியான தடைகளை விவரிக்கும் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்தநிலையில், மாகாண சபைத் தேர்தல்கள் எந்த தேர்தல் முறைமையின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிப்பதும், அது தொடர்பான பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளை வழங்குவதுமே இந்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள முக்கிய பொறுப்பாகும்.

## நிவாரண அணுகுமுறையா ... தொடர்ச்சி...

கப்படும் வரை, மீள்குடியேற்றத்திற்காக ஒதுக்கப்பட்ட காணிகளில் தற்காலிக வீடுகள் அமைத்து வழங்க வேண்டும் என்று அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இது மனிதாபிமான ரீதியாக அவசியமான தீர்மானமாக இருந்தாலும், அதேநேரத்தில் ஒரு கேள்வியும் எழுகிறது. இந்த தற்காலிக வீடுகள் மீண்டும் நிரந்தர தற்காலிகங்களாக மாறிவிடுமா? என்ற கேள்வி மலையக மக்களின் மத்தியில் தொடர்ச்சியாக எழுந்துள்ளது.

மலையக மக்களின் வரலாற்றில் இதே போன்ற சம்பவங்கள் பல சந்தர்ப்பங்களில் இடம்பெற்றுள்ளன. தற்காலிக குடியிருப்புகள் பல தசாப்தங்கள் நீடித்திருக்கின்றன. இடம்பெயர்ந்த குடும்பங்கள் நிரந்தர வீடுகளுக்காக காத்திருக்கும்போது, அரசியல் மாற்றங்களும் நிர் வாக தாமதங்களும் திட்டங்களை பாதித்துள்ளன. அதன் காரணமாகவே, மீள்குடியேற்றம் என்பது வீடு கட்டு வது மட்டுமல்லாது, அது நில உரிமையுடன் கூடிய குடியுரிமை அடிப்படையிலான சமூக மறுசீரமைப்பாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இது இவ்வாறிருக்க கண்டி மாவட்டத்தின் தரவுகள் பல நிர்வாக சிக்கல்களை வெளிப்படுத்தியுள்ளன.

கண்டி மாவட்டத்தில் முழுமையாக இடிந்த வீடுகளை விட, பகுதியளவில் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளன. எனினும் பாதிக்கப்பட்ட வீடுகளில் 2,304 வீடுகளுக்கான கொடுப்பனவில் சிக் கல் உள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் 3,795 வீடுகளுக்கான புவிசரிதவியல் மற்றும் அளவை பணியகத்தின் அறிக்கை கள் இதுவரையில் கிடைக்கவில்லை என தெரியவந்துள்ளது. கண்டி மாவட்டத்தை பொருத்தவரையில் ஒரு மிக முக்கியமான பிரச்சினை வெளிப்படுகிறது.

மதிப்பீடுகள், அறிக்கைகள், நிர்வாக தாமதங்கள் ஆகியவை மக்கள் மீள்குடியேற்றத்தை தாமதப்படுத்துகின்றன. அதிக அபாய பகுதிகளில் வாழும் குடும்பங்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டிய அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார். ஆனால் வெளியேற்றம் மட்டும் போதாது. அவர்கள் எங்கே செல்லப் போகிறார்கள்? எந்த உரிமையுடன் குடியேறப்போகிறார்கள்? இதில்தான் மீண்டும் "காணி உரிமை" என்ற கேள்வி முன்வருகிறது. மலையகத்தில் பல குடும்பங்கள் தலைமுறைகளாக வாழ்ந்தாலும், அவர்கள் வசிக்கும் நிலத்தின் உரிமையாளர்கள் அல்ல. இதனால் அவர்கள் இயற்கை அனர்த்தங்களின் போது மிக எளிதாக இடம்பெயர்க்கப்படக்கூடிய சமூகமாகவே உள்ளனர். மாத்தளை மாவட்டத்தில் அரசாங்கம் நஷ்டஈடு வழங்கலில் முன்னேற்றம் கண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. மாத்தளை மாவட்டத்தில் 25,000 மற்றும் 50,000 ரூபாய் கொடுப்பனவுகள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கான 15,000 மற்றும் 10,000 ரூபாய் உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. இவை அவசர நிவாரண நடவடிக்கைகளாக வழங்கப்பட்டுள்ளன. ஆனால் ஒரு குடும்பம் தனது வீடு, வாழ்வாதாரம், நிலம், சமூக உறவுகள் அனைத்தையும் இழந்தபோது, 25,000 அல்லது 50,000 ரூபாய் எவ்வளவு காலத்திற்கு உதவும்? இதுவே மலையக வீடமைப்பு பிரச்சினையின் அடிப்படை முரண்பாடு. அரசாங்கங்கள் பெரும்பாலும் நிவாரண அணுகுமுறையிலேயே செயல்படுகின்றன. ஆனால் மக்களுக்கு தேவைப்படுவது உரிமை அடிப்படையிலான அணுகுமுறையாக உள்ளது

### "லைன் அறைகள்" – பேரழிவின் மையம்

டித்வா பேரழிவால் அதிகம் பாதிக்கப்பட்டவை பெருந்தோட்ட லைன் வீடுகளாகும். இந்த "லைன் வீடுகள்" காலனித்துவ காலத்தில் தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்டவை. குறுகிய இடம், சுகாதார வசதியின்மை, நிலச்சரிவு அபாயம், நீர் வடிகால் பிரச்சினைகள் போன்றவை பல ஆண்டுகளாக இருந்தபோதும், அவை முறையாக மாற்றப்படவில்லை. இன்றும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இவ்வாறான வீடுகளில் வாழ்கின்றன. டித்வா சூறாவளி வெறும் இயற்கை பேரழிவாக அல்லாது அது இந்தக் குடியிருப்பு அமைப்பின் தோல்வியை வெளிப்படுத்தியுள்ளது.

### அரசாங்கத்தின் தற்போதைய அணுகுமுறை

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கூட்டங்களின் போது அரசாங்கம் பொதுவான முக்கிய அணுகுமுறைகளை கையாள்வது அவதானிக்க கூடியதாக உள்ளது. அந்த அடிப்படையில், விரைவான மீள்குடியேற்றம், காணிகளை அடையாளங்காணல், தனியார் கட்டுப்பாட்டிலுள்ள அரச காணிகளை விடுவித்தல், தற்காலிக வீடுகள் அமைத்தல், நஷ்டஈடு வழங்கல், உட்கட்டமைப்பு மேம்பாடு, வீதி மற்றும் பாலங்கள் சீரமைத்தல், விவசாய நிலங்களை மீட்பதற்கான நிதி உதவி மற்றும் அதிக அபாயப் பகுதிகளில் இருந்து மக்களை வெளியேற்றுதல் போன்ற அணுகுமுறைகளை கையாள வேண்டும் என மேற்கூறிய அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களின் போதும் பொது வாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் அவசியமான நடவடிக்கைகளே.

குறிப்பாக "பணத்தை ஒருபோதும் தடையாக கருத வேண்டாம்" என்று ஜனாதிபதி அதிகாரிகளுக்கு வழங்கிய அறிவுறுத்தல், அரசாங்கம் இந்த நெருக்கடியை தீவிரமாக எடுத்துக்கொள்கிறது என்பதைக் காட்டுகிறது. ஆனால், இந்த மீள்குடியேற்றம் மக்களை மீண்டும் ஒரு புதிய சார்புநிலைக்குள் தள்ளுமா? அல்லது அவர்களுக்கு உண்மையான உரிமையுடன் கூடிய வாழ்க்கையை வழங்குமா? என்ற கேள்விகளும் எழுகின்றன.

### காணி உரிமை – மலையகத்தின் பிரதான கோரிக்கை

மலையக அரசியல் மற்றும் சமூக இயக்கங்கள் பல ஆண்டுகளாக வலியுறுத்திவரும் ஒரே கோரிக்கை காணி உரிமையாகும். காணி உரிமையில்லாத குடும்பங்களுக்கு நிரந்தர பாதுகாப்பு இல்லை. அவர்கள் எப்போது வேண்டுமானாலும் வெளியேற்றப்படலாம் என்ற நிலை இன்றும் தொடர்கிறது இதன் காரணமாகவே பல பகுதிகளில் பெருந் தோட்ட தொழிலாளர்கள் தாமாகவே அமைக்கும் குடியிருப்புகள் உடைத்து நொறுக்கப்படுகின்றன. இதற்கான உதாரணமாக அண்மையில் இரத்தினபுரி நீலகாமம் தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவத்தை கூற முடியும். மலையக மக்கள் பெரும்பாலும் "தொழிலாளர்கள்" என்ற அடையாளத்திலேயே வைத்திருக்கப்பட்டுள்ளனர்.

"காணி உரிமையுள்ள குடிமக்கள்" என்ற நிலைக்கு அவர்கள் இன்னும் கொண்டு வரப்படவில்லை. டித்வா பேரழிவு இந்த உண்மையை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது. மீள்குடியேற்றம் என்பது வெறும் நிர்வாகப் பணியல்ல. அது ஒரு மனித உரிமை செயற்பாடாக இருக்க வேண்டும். அதற்கான அடிப்படை அம்சங்களாக நிரந்தர காணி உரிமை, பாதுகாப்பான வீடமைப்பு, கல்வி சுகாதார குடிநீர் மற்றும் சாலை வசதி போன்றன இருக்க வேண்டும். மலையக மக்களின் வீடமைப்பு பிரச்சினை தேர்தல் காலங்களில் பலமுறை பேசப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பல திட்டங்கள் பாதியிலேயே நின்றுவிட்டன. இப்போது டித்வா பேரழிவுக்குப் பிறகு மீண்டும் ஒரு புதிய வாய்ப்பு உருவாகியுள்ளது.

இந்த வாய்ப்பு வெறும் புதிய வீடுகள் கட்டுவதற்காக மட்டுமல்லாது மலையக சமூகத்தின் வரலாற்று அநீதியைச் சரிசெய்யும் வாய்ப்பாகும். டித்வா சூறாவளி ஆயிரக்கணக்கான வீடுகளை இடித்திருக்கலாம். ஆனால் அது இன்னொரு உண்மையையும் வெளிப்படுத்தியுள்ளது. மலையக மக்கள் இன்னும் பாதுகாப்பான உரிமையுள்ள குடிமக்களாக இந்த நாட்டில் வாழவில்லை. அவர்கள் இன்னும் காணி உரிமையற்ற தொழிலாளர் குடியிருப்புகளில் வாழ்கின்றனர். அவர்கள் இன்னும் இயற்கை பேரழிவுகளுக்கு மிக எளிதில் பலியாகின்றனர். அதனால், டித்வா பேரழிவுக்குப் பிந்தைய மீள்குடியேற்றத் திட்டங்கள் வெறும் "வீடமைப்பு திட்டங்கள்" ஆக இருக்கக் கூடாது. ஒரு புதிய வீடு மட்டும் ஒரு குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாக்காது. ஆனால், சொந்த காணியில் கட்டப்பட்ட பாது காப்பான வீடு, அந்தக் குடும்பத்தின் தலைமுறைகளையே மாற்றும்.

• • •

## ஈரான் குறித்த தொலைபேசி... தொடர்ச்சி...

மேலும், அமெரிக்காவுக்கு "100% நல்ல பதில்கள்" கிடைக்காவிட்டால், போர் "மிக விரைவாக" மீண்டும் தொடங்கக்கூடும் என்றும் அவர் கூறினார்.

பேச்சுவார்த்தைகள் குறித்து நெதன்யாகு "மிகுந்த சந்தேகத்துடன்" இருப்பதாகவும், ஈரானின் இராணுவத் திறன்களை மேலும் சீர்குலைக்கவும், முக்கிய உள்கட்டமைப்புகளை அழிப்பதன் மூலம் நாட்டை பலவீனப்படுத்தவும் போரை மீண்டும் தொடங்க விரும்புவதாகவும் ஆக்சியோஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இருப்பினும், ஈரான் விவகாரத்தில் நெதன்யாகு "நான் விரும்புவதை எல்லாம் செய்வார்" என்று கூறிய ட்ரம்ப், இஸ்ரேலியத் தலைவருடன் தனக்கு நல்ல உறவு இருப்பதாக வலியுறுத்தினார்.







இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



## மீண்டும் பொருளாதார நெருக்கடியில் மக்கள்

கத்தரிக்காய் :- ரூ.400.00
வெண்டிக்காய் :- ரூ. 400.00
கறிமிளகாய் :- ரூ. 300.00
பயற்றை :- ரூ. 400.00
பச்சை மிளகாய் :- ரூ. 500.00
கோவா :- ரூ. 300.00
லீக்ஸ் :- ரூ. 600.00
கரட் :- ரூ. 600.00
இஞ்சி :- ரூ. 700.00
தேசிக்காய் :- ரூ. 700.00
வெள்ளைப்பூண்டு :- ரூ. 700.00
வெங்காயம் :- ரூ. 280.00
உருளைக்கிழங்கு :- ரூ. 280.00
பூசணிக்காய் :- ரூ. 250.00

சுரேஸ். திகழினி




## சிறுவர்களை பாதுகாப்போம்

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்று கூறும் நாம் அவர்களை பாதுகாப்பதும் நமது கடமையாகும். தற்போது நாட்டில் நடக்கும் பிரச்சி னைகளில் அதிகமான பாதிப்பை எதிர்கொள்ளுபவர்கள் சிறுவர்களே ஆவார்கள். சிறுவர் துஷ்பிரயோகம், உடலுறுப்பை எடுத்தல், வேலைக்கு அமர்த்தல் என பல பிரச்சினைகளை எதிர்கொள்ளுகின்றனர். இதன் காரணமாக பல சிறார்கள் காணாமல் ஆக்கப்பட்டுக்கொண்டுள்ளனர். இவ்வாறான செய்திகளை நாம் தினமும் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றோம்.

ஆகவே பெற்றோர்கள் குழந்தைகளை எப்போதும் கவனமாக பார்த்து கொள்ள வேண்டும். பிள்ளைகளுக்கு, தெரியாத நபர்களுடன் செல்ல கூடாது, அவர்கள் கொடுக்கும் எதையும் உண்ண கூடாது போன்ற அறிவுரைகளை வழங்க வேண்டும். மேலும் அவசர தொலைபேசி இலக்கங்களை குழந்தைகள் அறிந்து வைத்திருக்கச் செய்தல் வேண்டும். முடியுமானவரை பெற்றோராகிய நாம் சிறுவர்களிடம் அன்பாகவும், அவர்களது கருத்துக்களையும், அவர்களது சிறுசிறு கதைகளையும் செவிமடுக்க கூறியவராகவும் இருக்க வேண்டும். அப்பொழுது தான் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் சிறுவர்கள் என்ன நடந்தது என்பதை நம்மிடம் தைரியமாக கூறுவார்கள்.

முக்கியமாக சமூக வலைத்தளங்களை பயன்படுத்தும் போது அவ தானிக்க வேண்டும். ஏனென்றால், தற்போது அதுவே சிறுவர்கள் காணமால் ஆக்கப்படுவதற்கும், துஷ்பிரயோகங்களுக்கு உட்படுவதற்கும் காரணமாக உள்ளது. மற்றும் தகாத நட்புகளுக்கு உருவாகுவதற்கும் சமுக வலைத்தளங்கள் காரணமாக உள்ளது. இதனால், அந்நட்புகள் உண்மையானவை என நம்பி பல சிறுமிகள் புத்தகம் சுமந்து பள்ளி செல்லும் வயதில் பிள்ளை சுமந்து வைத்தியசாலை செல்கின்றனர் . ஆகவே முடியுமானவரை நமது சிறுவர்களை பாதுகாத்து நாளைய சிறந்த தலைவர்களாக உருவாக வழி செய்வோம்.

ம.துலக்சனா
விளாங்குளம்

## மே 25 காணாமக் போன குழந்தைகள் தினம்






# தாயகமும் வாழ்வும்







